To

11th April 2025

| | |
|---|---|
| Listing Department<br>BSE Limited<br>25th Floor, P. J. Towers,<br>Dalal Street,<br>Mumbai – 400 001.<br>**Scrip Code: 505368** | Listing Department<br>National Stock Exchange of India Limited<br>Exchange Plaza, C-1, Block G,<br>Bandra Kurla Complex, Bandra East,<br>Mumbai – 400 051.<br>**Scrip Code: SEMAC** |

Dear Sir / Madam,

**Sub: Newspaper Advertisements under Regulation 47 of SEBI (Listing Obligations & Disclosure Requirements) Regulations, 2015**

Pursuant to Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed copies of Newspaper Advertisements published on 11th April 2025, inter-alia, intimating completion of the electronic transmission of Postal Ballot Notice to the Members.

Postal Ballot Notice published in the following newspapers:

1. Malai Murasu (Tamil Newspaper) and
2. Business Standard (English Newspaper)

Kindly take the same on your records.

Thanking you

**For Semac Consultants Limited**
**(Formerly Known as Revathi Equipment Limited)**

AAKRITI GUPTA

Digitally signed by AAKRITI GUPTA
Date: 2025.04.11 16:02:31 +05'30'

**Aakriti Gupta**
**Company Secretary and Compliance Officer**

முரசு : 14 ஒலி : 65
VOLUME: 14 ISSUE:65
8 பக்கங்கள் விலை: 500 காசுகள்
8 PAGES PRICE: Rs.5/-
MALAI MURASU
KOVAI
Reg. No.CB/100/2024-2026
RNI Regn. No. TNTAM/2016/75063
மாலை முரசு
கோவை
www.malaimurasu.com
வெள்ளிக்கிழமை/FRIDAY
11.4.2025 (பங்குனி-28)
★★

### பெண்கள் குறித்து ஆபாசக் கருத்து: கனிமொழி கண்டனம் எதிரொலி:

# அமைச்சர் பொன்முடியின் கட்சிப் பதவி பறிப்பு!

## ★ முதலமைச்சர் ஸ்டாலின் அதிரடி நடவடிக்கை;
## ★ புதிய துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா!!

சென்னை,ஏப்.11–

பெண்கள் குறித்து அவதூறாக பேசியதாக அமைச்சர் பொன்முடி மீது குற்றச்சாட்டு எழுந்தது. அவரது பேச்சுக்காக, கனிமொழி எம்.பி. கடும் கண்டனம் தெரிவித்தார். சமூக ஊடகங்களிலும்விமர்சனங்கள் எழுந்தன. இதையடுத்து, அவரது கட்சிப் பதவி பறிக்கப்பட்டுள்ளது. அதாவது, அவரிடமிருந்த தி.மு.க. துணைச்செயலாளர் பதவி நீக்கப்பட்டு, திருச்சி சிவாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையை ஸ்டாலின் எடுத்துள்ளார்.

2021–ல் நடந்த சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. வெற்றிபெற்றது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் புதிய அரசு அமைந்தது. அப்போது, உயர்கல்வித்துறை அமைச்சராக பொன்முடி நியமிக்கப்பட்டார். அவரது பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியது. ஏற்கனவே, நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பெண்களின் இலவச பேருந்து பயணம் தொடர்பாக சில கருத்துக்களை தெரிவித்தார். அதற்கு, கண்டனங்கள் எழுந்தன.

அவருக்கு எதிராக சொத்துக்குவிப்பு வழக்கும் உள்ளது. மேலும், அமலாக்க துறையும் அவரை விசாரித்தது. சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை அறிவிக்கப்பட்டதால் அவர் அமைச்சர் பதவியை விட்டு விலக நேர்ந்தது.

மேல்முறையீட்டு வழக்கில் அவருக்கு நிவாரணம்

6–ம் பக்கம் பார்க்க



பங்குனிஉத்திரத்தைமுன்னிட்டுகோவைமருதமலைமுருகன்கோவிலுக்குபால்குடம்,காவடிஎடுத்துவரும்பக்தர்களை படத்தில் காணலாம்.

### கூட்டணி குறித்து முக்கிய பேச்சு:

# சென்னை நட்சத்திர ஓட்டலில் பா.ஜ.க. தலைவர்களுடன் அமித்ஷா ஆலோசனை!

## தமிழக புதிய தலைவர் நாளை அறிவிப்பு உறுதி!!

சென்னை,ஏப்.11–

சென்னை கிண்டியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தங்கியுள்ள அமித்ஷா, பா.ஜ.க. மூத்த நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதற்கிடையே, தமிழக பா.ஜ.க. தலைவர் இன்று போட்டியின்றி தேர்வு செய்யப்படுகிறார். இதற்காக, பா.ஜ.க. மேலிடப்பிரதிநிதி கிஷண் ரெட்டி சென்னைக்கு வந்துள்ளார்.

இம்மாதம் 6–ஆம் தேதி இந்தியா முழுவதும் பா.ஜ.க. ஸ்தாபன நாள் கொண்டாடப்பட்டது. பா.ஜ.க. தேசியத் தலைவர் தேர்வு பற்றிய அறிவிப்பு சில நாட்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏப்ரல் 18 முதல் 20–ஆம் தேதி வரை பெங்களூரில் பா.ஜ.க. தேசிய செயற்குழுமற்றும்பொதுக்குழுக் கூட்டம் நடைபெறுகிறது. பொதுக்குழுவில் பா.ஜ.க. தேசியத் தலைவர் தேர்வுக்கு ஒப்புதல் அளிக்கப்படும்.

பல்வேறு மாநிலங்களில் பா.ஜ.க. தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டு விட்டனர். தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் பா.ஜ.க. தலைவர் தேர்வு இறுதிநிலையை எட்டியுள்ளது.



பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலையின் பதவிக்காலம் ஏற்கெனவே முடிவடைந்து விட்டது. அவருக்கு பதவி நீட்டிப்பு அளிக்கப்படுமா? அல்லது அளிக்கப்பட மாட்டாதா? என்ற கேள்வி மேலோங்கியது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மத்திய உள்துறை மந்திரியும், பா.ஜ.க. மூத்த தலைவருமான அமித்ஷாவை அண்மையில் சந்தித்துப் பேசினார்.

இதைப்போல அ.தி.மு.க. மூத்த நிர்வாகி செங்கோட்டையன் அமித்ஷாவையும், மத்திய நிதிய மைச்சர் நிர்மலா சீதாராமனையும் சந்தித்துப் பேசினார்.

இப்பின்னணியில் பா.ஜ.க.–அ.தி.மு.க. கூட்டணி ஏறத்தாழ உறுதியாகி விட்டது என்று

6–ம் பக்கம் பார்க்க

### சென்னை பனையூரில்

# தமிழக வெற்றிக்கழக மாவட்ட செயலாளர்களுடன் விஜய் சந்திப்பு!

## கூட்டணி – பூத் கமிட்டி மாநாடு குறித்து ஆலோசனை!!



சென்னை, ஏப்.11–

சென்னை பனையூரில் த.வெ.க. மாவட்டச் செயலாளர்களுடன் விஜய் இன்று முக்கிய ஆலோசனை நடத்தி வருவதாக கூறப்படுகிறது. அப்போது பூத் கமிட்டி மாநாடு மற்றும் கூட்டணி தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகிறார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் முதலாம் ஆண்டு விழா கடந்த பிப்ரவரியில் நடைபெற்றது. அதன் பிறகு கடந்த மாதம் மாமல்லபுரத்தில் உள்ள தனியார் ஓட்டலில் கட்சியின் பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் விஜய் முக்கிய உரையாற்றினார். பா.ஜ.க. – தி.மு.க.வை கடுமையாக குறை கூறினார். இந்த இரண்டு கட்சிகளும் ரகசிய கூட்டணி வைத்திருப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

தமிழக வெற்றிக் கழகத்திற்கு 120 மாவட்ட அமைப்புகள் உள்ளன. இதில் 114 மாவட்ட அமைப்புகளுக்கு செயலாளர்களும், பிற நிர்வாகிகளும் அறிவிக்கப்பட்டு விட்டனர். இன்னும் 6 மாவட்ட அமைப்புகளுக்கு மட்டும் நிர்வாகிகள் நியமிக்கப்பட வேண்டும். இந்த நிலையில் கட்சியின் சார்பில் பூத் கமிட்டி

6–ம் பக்கம் பார்க்க

### இன்றும் ரூ.1,480 அதிகரிப்பு:

# தங்கம் விலை பவுன் ரூ.70,000-த்தை நெருங்கியது!

சென்னை, ஏப்.11–

தங்கம் விலை பவுனுக்கு இன்றும் ரூ.1,480 அதிகரித்தது. இதன் மூலம் ஒரு பவுன் ரூ.70 ஆயிரத்தை நெருங்கிவிட்டது. தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கிறது. ஜெட் வேகத்தில் ஏறிவந்த தங்கம் தற்போது மின்னல் வேகத்துக்கு மாறிவிட்டது. மார்ச் மாதத்திலேயே பவுன் ரூ.67 ஆயிரத்தை கடந்தது. பின்னர் சற்று இறங்கியது.

ஏப்ரல் 8–ஆம் தேதி ரூ.65,800 ஆக இருந்தது. ஏப்ரல் 9–ஆம் தேதி மீண்டும் ரூ.67,280 ஆக மாறிவிட்டது. அன்றைய தினம் மட்டும் 2 முறை விலை உயர்வு ஏற்பட்டது.

நேற்று மேலும் ரூ.1,200 அதிகரித்து ரூ.68,480–ஆகஉயர்ந்தது.இன்றுமேலும் ரூ.1,480 உயர்ந்து ரூ.69,960ஆக எகிறிவிட்டது. ரூ.70 ஆயிரத்தை தொட இன்னும் ரூ.40 மட்டுமே மீதி உள்ளது.

இன்று ஒரு கிராம் தங்கத்தின் விலை ரூ.8,745 ஆகும். அதே நேரத்தில் ஒரு பவுன் நகையின் விலை ரூ.80 ஆயிரத்தை நெருங்கிவிடும். வெள்ளியின் விலையில் கிராமுக்கு ரூ.1 அதிகரித்து ரூ.108–ஆக விற்கப்படுகிறது.

### பல்லடம் அருகே இன்று அதிகாலை

# நின்ற லாரி மீது ஆம்புலன்ஸ் மோதி கணவன் - மனைவி பலி!

## மேல்சிகிச்சைக்காக சென்றபோது பரிதாபம்!!

பல்லடம், ஏப். 11–

பல்லடம்அருகே இன்று அதிகாலை நின்று கொண்டிருந்த லாரியின் பின்புறம் ஆம்புலன்ஸ் மோதியது. இதில்மேல்சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்ட நோயாளி மற்றும் அவரது மனைவி பலியானார்கள்.

பட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்தவர் முருகன் (65). இவர் அப்பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவர் மேல் சிகிச்சைக்காக கோவை தனியார் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் செல்லப்பட்டார். அவரது மனைவி கல்யாணி மற்றும் பவிதா உடன் சென்றனர். ஆம்புலன்சை டிரைவர்கள் விஜய், கவியரசன் ஆகியோர் மாறி மாறி இயக்கினர்.



பல்லடம் அடுத்த பெரும்பாளி பகுதியை இன்று அதிகாலையில் ஆம்புலன்ஸ் கடக்க முயன்றது. அப்போது முன்னால் சாலையோரமாக ஒரு லாரி நின்று கொண்டிருந்தது. திடீரென கட்டுப்பாட்டை இழந்த ஆம்புலன்ஸ் அந்த லாரியின் பின்புறம் மோதியது. இதில் ஆம்புலன்சில் அழைத்து செல்லப்பட்ட நோயாளி முருகன் சம்பவ இடத்திலேயே பலியானார். உடன் சென்ற கல்யாணி, பவிதா மற்றும் டிரைவர்கள் விஜய், கவியரசன் ஆகியோர் இடிபாடுகளில் சிக்கி படுகாயம் அடைந்தனர்.

விபத்து பற்றி தகவல் அறிந்து வந்த தீயணைப்புத்துறையினர் படுகாயம் அடைந்த பவிதா, கல்யாணி, டிரைவர்கள் விஜய், கவியரசன் ஆகியோரை மீட்டு கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி கல்யாணி பரிதாபமாக உயிரிழந்தார்.

விபத்து குறித்து பல்லடம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



கூலி உயர்வு கேட்டு கோவை திருப்பூர் மாவட்ட விசைத்தறியாளர்கள் இன்று முதல் 5 நாட்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு கொ.ம.தே.க. பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் ஆதரவு தெரிவித்து கலந்து கொண்டார்.

மாலை முரசு

# தமிழ்ப் புத்தாண்டு பலன்கள்

11.04.2025



பெருங்குளம் ராமகிருஷ்ணன்

நிகழும் மங்களகரமான ஸ்வஸ்திஸ்ரீகுரோதி வருஷம் உத்தராயனம் சிசிர ரிது பங்குனி மாதம் 30–ஆம் தேதி பின்னிரவு (விஸ்வாவஸு வருஷம் சித்திரை 01 முன்னிரவு) 14.04.2025 அன்றைய தினம் திங்கட்கிழமை க்ருஷ்ண பக்ஷ பிரதமையும் ஸ்வாதி நக்ஷத்ரமும் வஜ்ர நாமயோகமும் கௌலவ கரணமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி இரவு மணி 2.38க்கு (உதயாதி நாழிகை: 50:56)க்கு மகர லக்னத்தில் ஸ்ரீவிஸ்வாவஸு வருஷம் பிறக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| புதன் சுக் (வ) ரகு | சூர் | குரு | |
| சனி | ராசி | | செவ் |
| லக்னம் | | | |
| | | சந்தி | கேது |

| | | | |
|---|---|---|---|
| | சூர் | சனி | |
| | அம்சம் | | செவ் ராகு |
| கேது | | | புதன் குரு சுக் (வ) |
| சந்தி | | | லக்னம் |

## விஸ்வாவஸூ வருஷ வெண்பா:

விசுவா வசுவருடம் வேளாண்மை யேறும்
பசுமாடு மாடும் பலிக்குஞ் சிசுநாசம்
மற்றையரோ வாழ்வார்கண் மாதவங்கண்
மீறுமே யுற்றுலகி னல்லமழை யுண்டு.

– இடைக்காட்டார்

பாடல் விளக்கம்: விஸ்வாவஸூ வருஷம் விவசாயம் செழிக்கும். பசுக்கள், காளை மாடுகள் மற்ற கால்நடைகள் அதிகரிக்கும். குழந்தைகளுக்கு வியாதி கண்டு இழப்புகள் ஏற்படலாம். நாட்டு மக்கள் சுகமாக வாழ்வார்கள். நாடு முழுவதும் தர்ம காரியங்கள், தவங்கள் நடைபெறும். நாடு முழுவதும் நல்ல மழை பொழிந்து சுபிக்ஷம் ஏற்படும் என வெண்பாவில் சொல்லப்பட்டுள்ளது.

## சித்திரை மாதப் பிறப்பின் பலன்

இந்த ஆண்டு சித்திரை மாதம் திங்கள்கிழமை அன்று வருவதால் மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களினால் மக்களுக்கு நல்ல பலன்கள் ஏற்படும். பெண்கள் சம்பந்தப்பட்ட பணிகளில் அதிகமாக ஈடுபாடு கொள்வார்கள். பெண்களை மதிப்பவர்கள் ஏற்றம் காண்பார்கள்.

## மகர சங்கராந்தி பலன்

இந்த ஆண்டு புதன்கிழமை சங்கராந்தி பிறப்பதால் நல்ல மழை பெய்யும். கல்வி சம்பந்தமான விஷயங்களில் நல்ல மாற்றங்கள் வந்து சேரும். மக்கள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

## மேஷம்




(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1–ம் பாதம்)

கிரகநிலை: ராசியில் சூர்யன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு சுக ஸ்தானத்தில் செவ்வாய் ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது களத்திர ஸ்தானத்தில் சந்திரன் லாப ஸ்தானத்தில் சனி அயன சயன போக ஸ்தானத்தில் ராகு, சுக்ரன்(வ), புதன் என வலம் வருகிறார்கள்.

பலன்: அன்பு நிறைந்த மனமும் ஆன்மிகப் பணி செய்வதில் ஆர்வம் நிறைந்த மேஷராசி அன்பர்களே!

உங்கள் பேச்சில் வசீகரமும் இனிமையும் வேதாந்த ரகசியங்களும் கலந்து இருக்கும். சமூகத்தில் உயர்ந்தவர்கள் மத்தியில் புதியதொரு மரியாதையும் வரவேற்பும் உங்களுக்கு கிடைக்கப்பெறும். தாயின் உடல்நலத்தில் சிறு சிறு தொந்தரவுகள் உண்டாகி நல்ல பராமரிப்பின் காரணமாக உடல் நலம் பெறும். பூர்வ புண்ணிய சொத்துக்களும் அதனால் வரக்கூடிய தனலாபங்களும் உங்கள் தகுதியை உயர்த்தும் கடன் வழக்கு போன்ற இனங்களிலிருந்து உங்களுக்கு தொந்தரவுகள் ஏதும் அதிகம் வராத வண்ணம் நல்ல பலன்கள் நடக்கும். வெகுகாலம் தீராத பிரச்சினைகள் மனதுக்கு சந்தோஷம் தீர்வை தரும்.

கணவன் – மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். ஆயுள் அபிவிருத்தி பெறுவதற்கான வகையில் சனியின் நற்செயல்கள் இருக்கும். தந்தை வழி சார்ந்த உறவினர்களால் உங்கள் முன்னேற்றத்தை கண்டு தங்களுக்கு தேவையான உதவிகளை உங்களிடம் கேட்டு பெற வருவார்கள். நடைமுறை செயல்பாட்டுக்குளை அதற்கேற்ப உதவலாம். திருமண வாய்ப்புக்காக காத்திருப்பவர்களுக்கு உறவினர் சார்ந்த வகையில் சில தடைகள் வந்து விலகும். வெளிநாடு சென்று திரும்பும் யோகம் அதிகம் உண்டு.

உத்தியோகஸ்தர்கள் அரசு தனியார் துறைகளில் உள்ளவர்களும் இதுவரை இருந்த ஆடம்பர செலவினங்களை தவிர்த்து தங்களின் குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக சுபமங்களச் செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும். உங்களுக்கு தேவையான பொருளாதாரம் நிறைந்த வகையில் கிடைக்கும். நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் மற்றவர்கள் வேதவாக்காக கருதப்படும்.

உங்களது நற்செயல்களால் நிலைத்த புகழும் ஊழியர்களால் அதிகம் நேசிக்கப்படும் சூழ்நிலையும் உருவாகும். வீடு, மனை, வாகன வகைகளில் நல்ல லாப பலன்கள் நடந்து மனதை மகிழ்விக்கும். தந்தை வழியில் உள்ள சொத்துக்கள் ஆதாய பலன்களைத் தரும். பார்க்கும் உத்தியோகத்தில் முழு தன்னிறைவும் பாராட்டுகளும் கிடைக்கும்.

வியாபாரிகள் வாகன உதிரிபாகங்களை விற்பனை செய்பவர்கள், ரெடிமேட் வியாபாரிகள் வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனை செய்பவர்கள் தங்கள் தொழிலில் சிறந்த முன்னேற்றம் காண்பார்கள்.

பெண்கள் கைதொழில் ஒன்றை கற்றுக்கொண்டு பணியில் ஈடுபட்டுள்ள பெண்கள் தொழில் மேன்மை பெறுவார்கள். திருமணம் ஆன பெண்கள் கணவனுடன் மன பேதங்கள் உருவாகி பெரியவர்களின் சமரசத்தால் நல்வழியில் செயல்படுவார்கள்.

கலைஞர்கள், சினிமா, நாடகம், சின்னத்திரை, ஆடல், பாடல் போன்றவற்றில் ஈடுபாடு உள்ளவர்கள் தங்கள் தொழிலில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு நிறைவான பொருளாதாரமும் அதிகமான புகழும் பெறுவார்கள்.

அரசியலில் புதிய பிரவேசம் நிகழ்த்த இருப்பவர்கள் சனிபகவானின் நல்லருளைப் பலமாகப் பெற்று மக்களிடம் நற்பெயர் பெறுவார்கள்.

பரிகாரம்: அறுபடை முருகன் கோவிலுக்கு ஏதேனும் ஒன்றுக்கு அடிக்கடி தரிசனம் செய்து விட்டு வரவும்.

சொல்ல வேண்டிய மந்திரம்: "சுப்பிரமணிய புஜங்கம்" பாராயணம் செய்யவும்.

மலர் பரிகாரம்: "செவ்வரளி மலரை" அம்மனுக்கு படைத்துவர துன்பங்கள் யாவும் நீங்கும்.

அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், வியாழன்
அதிர்ஷ்ட திசைகள்: கிழக்கு, தென்மேற்கு
அதிர்ஷ்ட நிறங்கள்: வெள்ளை, சிவப்பு
அதிர்ஷ்ட எண்கள்: 2, 3

## ரிஷபம்




(கிருத்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள்)

கிரகநிலை: ராசியில் குரு தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் கேது ரண ருண ரோக ஸ்தானத்தில் சந்திரன் தொழில் ஸ்தானத்தில் சனி லாப ஸ்தானத்தில் ராகு, சுக்ரன்(வ), புதன் அயன சயன போக ஸ்தானத்தில் சூர்யன் என வலம் வருகிறார்கள்.

பலன்: வசீகரப் பார்வையும், அழகான தோற்றமும், இனிமையான பேச்சும் நிறைந்த ரிஷப ராசி அன்பர்களே!

மனதில் உத்வேகம் உருவாகி உயர்வான செயல்களைச் செய்வீர்கள். நிலுவையில் இருந்த பணம் உங்களுக்கு திரும்ப கிடைக்கும் உடன் சுமைகள் நீங்கி நிம்மதியான வாழ்க்கை முறைகள் உண்டாகும். சமூக காரியங்களில் தலையிட்டு திறம்பட பணியாற்றி நற்பெயர் பெறுவீர்கள். அரசு சார்ந்த மற்றும் தனியார் வங்கிகளின் உதவிகளை பெற்று வீடு மற்றும் மனைகளை வசதிக்கேற்ப மாறுதல் செய்வீர்கள். திருமணம் ஆனவர்களுக்கு புத்திரப்பேறு கிடைத்தாலும் வயது வந்த புத்திரர்கள் உள்ளவர்களுக்கு நல் உதவிகளும் கிடைக்கபெறும்.

தந்தை வழிசார்ந்த உறவினர்களால் அனுகூலமான பலன்கள் உருவாகும். இதனால் மனம் மகிழ்ச்சி கொள்ளும். தொழில் கவனங்கள் சிதறுவதால் தற்காலிகமான வீழ்ச்சி ஏற்பட்டு பின்னர் நிலைமை சரியாகும்.

வீடு மனைகள் வாங்கவும் அதனை அழகுபடுத்தவும் நல் வாய்ப்புகள் உண்டாகும். புத்திரர்கள் உங்கள் எண்ணத்திற்கேற்ப நடந்து கொண்டு நற்பெயரை காப்பாற்றுவார்கள். உடல் நலத்தில் பாதிப்பு வர வாய்ப்பு தெரிவதால் தகுந்த பயிற்சி முறைகளும் மருத்துவ சிகிச்சை முறைகளும் பின்பற்றி ஆரோக்கிய வாழ்வு பெறலாம். வாழ்க்கைத்துணையின் மூலம் நற் பலன்கள் தர உள்ளதால் அவரது பெயரில் புதிய சொத்து வாங்கும் போகும் நிறைவாக உள்ளது. குடும்ப ஒற்றுமை மேன்மையடையும். தந்தை வழி உறவினர்கள் தகுந்த உதவிகள் தருவார்கள். உத்தியோகத்தில் உயர்வுகள் உண்டு.

வியாபாரிகள்: விவசாயப் பொருட்களை குத்தகை முறையில் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபம் பெறுவார்கள். மின்சாரம் தொடர்புடைய பொருட்களை விற்பனை செய்பவர்கள் தங்கள் தொழிலில் முன்னேற்றம் அடைவர். இரு சக்கர, நான்கு சக்கர வாகன விற்பனையாளர்கள் தங்கள் தொழிலில் சிறிது சுணக்கம் கண்டு வியாபார உத்திகளை மாற்றி புதிய விற்பனை சந்தைகளை எட்டிப்பிடிப்பார்கள். கட்டுமான பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் சனியின் அருளால் வளம் பெறுவார்கள். தொழிலில் ஏற்பட்ட நிலுவை கடன்கள் பைசல் செய்யப்படும். புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டாகும்.

ஆரோக்கியம்: உடல் நலத்தில் தகுந்த கவனம் வேண்டும். குடும்ப அங்கத்தினர்கள் உங்கள் தொழில் சிறக்க தங்களின் பங்களிப்பை தருவார்கள். ஓய்வுக்குகூட நேர மின்றி உழைப்பே பிரதானமாக செயல்படுவீர்கள்.

பெண்கள்: குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு கடந்த காலங்களில் இருந்து வந்த பொருளாதார தடங்கல்கள் விலகி செழிப்பான பணப்புழக்கம் ஏற்படும். அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிவர்கள் தங்கள் பணிகளில் திறமையான நிர்வாகம் செய்து உயரதிகாரிகளிடம் நற்பெயரும், பதவி உயர்வும் பெறுவார்கள். இனிமையாக பேசுதலும் சமூகத்தில் புகழ்பெறும் வாய்ப்புகளும் நிறைய உண்டு. வீட்டை அலங்கரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். புத்திரர்கள் வகையில் அனுகூலமான பலன்கள் உண்டு.

திருமண வாய்ப்புக்கு காத்திருப்பவர்களுக்கு அனுகூலமான பலன்கள் உண்டு. நண்பர்கள் வகையில் தகுந்த ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில் ரீதியாக எதிரித்தனம் செய்தவர்கள் இடம் மாறி போய்விடுவார்கள்.

பரிகாரம்: அருகில் இருக்கும் பெருமாள் ஆலயத்திற்கு சென்று பெருமாளை தரிசனம் செய்து விட்டு வரவும்.

சொல்ல வேண்டிய மந்திரம்: "கோளறு திருப்பதிகத்தை' அன்றாடம் பாராயணம் செய்வது.

மலர் பரிகாரம்: "தாமரை மலரை" பெருமாளுக்கு சாத்திவர பொருளாதார நிலைமை உயரும்.

அதிர்ஷ்ட கிழமைகள்: புதன், வெள்ளி
அதிர்ஷ்ட திசைகள்: மேற்கு, தென்மேற்கு
அதிர்ஷ்ட நிறங்கள்: வெள்ளை, வெளிர்நீலம்
அதிர்ஷ்ட எண்கள்: 2, 6

## மிதுனம்




(மிருகசீரிஷம் 3,4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்)

கிரகநிலை: தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் சுக ஸ்தானத்தில் கேது பஞ்சம ஸ்தானத்தில் சந்திரன் பாக்கிய ஸ்தானத்தில் சனி தொழில் ஸ்தானத்தில் ராகு, சுக்ரன்(வ), புதன் லாப ஸ்தானத்தில் சூர்யன் அயன சயன போக ஸ்தானத்தில் குரு என வலம் வருகிறார்கள்

பலன்: சூழ்நிலைக்கு ஏற்ப பெருந்தன்மையான குணத்தால் விட்டு கொடுத்து வாழ்ந்து வெற்றியை பெற்று வரும் மிதுனராசி அன்பர்களே!

செயல்படாமல் முடங்கிக் கிடந்த திட்டங்கள் அனைத்தும் முழுமையான செயல்பாட்டுக்கு வந்து விடும். உங்கள் செயல்பாட்டின் ஒவ்வொரு வெற்றிக்கும் நண்பர்களின் உதவிக்கரம் முழு காரணமாக இருக்கும். பொருளாதாரத்தில் தகுந்த உயர்வு உண்டாகும். அரசுத்துறைகளின் ஆதரவும் தேவையான காலங்களின் கிடைக்கும். உங்கள் வீட்டில் ஆன்மிகப் பணிபுரியும் அன்பர்களும் தெய்வீகத் தன்மை பொருந்திய சாதுக்களும் வந்து அருளும் மார்க்கம் நிரம்ப உண்டு.

உங்கள் இல்லம் குருவருள் நிறைந்து காணப்படும். குல தெய்வ வழிபாடுகளும் தெய்வங்களுக்கு செய்ய வேண்டிய நேர்த்திகடன்களும் நிறைவேற்ற வாய்ப்பு வரும்.

கடன் வழக்கு போன்றவைகள் வரும் வாய்ப்புகள் உள்ளதால் செலவினங்களை கட்டுக்குள் வைப்பது நலம். கணவன், மனைவி குடும்ப ஒற்றுமையில் அனுகூல பயன்கள் உண்டாகும். நோய்நொடி இல்லா சுகஜீவன வாழ்க்கை அமையும். தந்தை வழி உறவினர்கள் உங்கள் வளர்ச்சி உண்டு சிறிது பொறாமைப்படுவார்கள். தாய்வழி சார்ந்தவர்கள் வாழ்வின் வெற்றிக்கு உறுதுணை புரிவார்கள். நீதித்துறை சார்ந்த பணி புரிவோர் ஏற்றம் பெறுவர்.

பேங்க் மற்றும் நிதி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் சிறப்பு பெறுவார்கள். பொதுவாக இந்த ராசிக்காரர்களுக்கு, தொழில் ஸ்தானம் சிறப்பான பலன் பெறும். மூத்த சகோதர வகை இனங்கள் உங்கள் கருத்துகளுக்கு எதிரான வகையில் செயல்படுவார்கள் அலுவலகப் பணி நிமித்தமாக வெளிநாடு சென்று திரும்பும் யோகம் சிலருக்கு உண்டு.

மாணவர்கள்: உடல் நலத்தில் கவனம் வேண்டும். ஆயுள் பலம் அதிகம் உண்டு தனித்தொழில் துவங்கும் தகுதி கிடைக்கும். நண்பர்களுடன் சுற்றுலா வாய்ப்புகள் ஏற்பட்டு மனமகிழ்வைத் தரும். தாயின் ஆதவும் தந்தையின் நியாயமான கண்டிப்பும் உங்களை நல்வழிக்கு அழைத்துச் செல்லும். குலதெய்வ அருள் தகுந்த சமயத்தில் துணை நிற்கும்.

பெண்கள்: அரசுத்துறை மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் மேல் அதிகாரிகளின் பாராட்டுதல்களைப் பெறுவார்கள். திருமணம் ஆன பெண்கள் புத்திரதோஷம் அமைப்பிற்குள் வருவதால் உரிய முறையில் பரிகாரம் செய்து நிறைவான வகையில் சத்தான பாக்கியம் அடையலாம். அழகு சார்ந்த பொருட்களை கைவேலைப்பாடு மூலம் உருவாக்கும் பெண்கள் நிறைய வேலைவாய்ப்புகள் பெற்று மனமகிழ்ச்சி அடைவார்கள். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். தாய் தந்தை உதவிகள் தேவையான போது கிடைக்கும். கைத்தொழில் வாய்ப்புகளினால் மேன்மை பொறுவார்கள் ஆடை ஆபரணச் சேர்க்கை குருவருளால் மன மகிழ்வைத்தரும்.

பரிகாரம்: சங்கட சதுர்த்தி தினங்களில் விநாயகரை வழிபடவும். முடிந்தபோதெல்லாம் ஔவையார் அருளிய "விநாயகர் அகவல்' துதியை பாராயணம் செய்யவும். இதனால் பல சங்கடங்கள் தவிடுபொடியாகும்.

சொல்ல வேண்டிய மந்திரம்: 'ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாமம்' அன்றாடம் பாராயணம் செய்வது.

மலர் பரிகாரம்: "மரிக்கொழுந்து மலரை" ஏதேனும் பெருமாள் கோவிலில் எழுந்தருளியிருக்கும் லக்ஷிமிக்கு சாத்திவர குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், புதன்
அதிர்ஷ்ட திசைகள்: மேற்கு, வடகிழக்கு
அதிர்ஷ்ட நிறங்கள்: பச்சை, மஞ்சள்
அதிர்ஷ்ட எண்கள்: 3, 5

## கடகம்




(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்)

கிரகநிலை: ராசியில் செவ்வாய் தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது சுக ஸ்தானத்தில் சந்திரன் அஷ்டம ஸ்தானத்தில் சனி பாக்கிய ஸ்தானத்தில் ராகு, சுக்ரன்(வ), புதன் தொழில் ஸ்தானத்தில் சூர்யன் லாப ஸ்தானத்தில் குரு என வலம் வருகிறார்கள்.

பலன்: இதயம் என்னும் கடலிலிருந்து அமுதமொழி பேசி அனைவரையும் தன் வசப்படுத்தும் கடகராசி அன்பர்களே!

திருமணம் ஆனவர்களுக்கு குடும்பத்தில் ஒற்றுமை கூடும். குரு எந்த வகையிலும் நன்மையை மட்டுமே தருவார். அரசாங்க அதிகாரிகளின் அனுகூலமான செயல்கள் உங்களுக்கு தேவையான சமயத்தில் கிடைக்கும். பூமி தொடர்பான விற்பனை தொழில் வாய்ப்புகளைப் பெற்றவர்கள் சுமாரான அளவில் லாபம் பெறுவார்கள். மருத்துவம் சார்ந்த தொழில் வகையில் புதிய மூலதனங்கள் எதையும் இப்போது முதலீடு செய்ய வேண்டாம். விவசாயத்தொழில் புரிபவர்கள் புதிய பயிர் வாய்ப்பு முறைகளை புகுத்தாமல் பழைய பாசன முறைகளையே பின்பற்றுங்கள்.

நண்பர்களின் உதவி நன்மை பயக்கும். ஆயுள் அபிவிருத்தி பெற நல்ல பழக்க வழக்கங்களையும் செய்வ வழிபாட்டையும் கடைபிடிப்பதுடன் தான தர்மம் செய்ய வேண்டும். தந்தை வழி சார்ந்த உறவினர்களால் தேவையான உதவிகள் கிடைக்கும்.

உத்தியோகஸ்தர்கள்: அரசுத்துறைகளில் அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் சிலரது குறுக்கீடுகளின் காரணமாக சோர்வு மனப்பான்மைக்கு ஆளாவார்கள். பின்னர் வரும் காலங்களில் தகுந்த ஆலோசனைகள் கிடைக்கப்பெற்று தங்கள் பணியில் சிறந்து விளங்குவார்கள். காவல்துறை, நீதித்துறை, மருத்துவத்துறையில் உள்ளவர்கள் சிலரது அதிருப்திக்கு ஆளாகி பின்னர் சிறப்பாக பணிபுரிந்து நன் மதிப்பை பெறுவார்கள். அரசாங்கத்திடம் பாராட்டும் விருதும் கிடைக்கும். இளைய சகோதரர்கள் துணை நின்று பல்வேறு உதவிகள் புரிவார்கள்.

தொழில் ரீதியாக புதிய ஆலோசகர்கள் கிடைத்து தொழில் சிறக்க வழி காட்டுவார்கள். வாகனங்களில் செல்லும் பொழுது மிகுந்த கவனமுடன் யெல்படுவது நல்லது. உடல் நலத்தில் சிறிய பாதிப்பு வந்தாலும் சிகிச்சை எடுத்துக் கொள்வது நலனைத்தரும். குடும்ப ஒற்றுமையில் கணவன் மனைவி இடையே குருவின் அனுகூலப்பார்வையால் மகிழ்ச்சி நிலவும். தந்தை வழி உறவினர்கள் அனுகூலமுடன் செயல்படுவார்கள்.

பெண்கள்: அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் சிறிது மந்த நிலை காண்பார்கள். அரசிடம் கேட்டிருந்த கடனுதவிகள் மற்றும் வரவேண்டிய நிலுவைத்தொகைகள் எளிதாகக் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் இடைஞ்சல் செய்யும் நோக்குடன் சிலர் செயல்படுவார்கள். அவர்களை இனம் கண்டு மேல் அதிகாரிகளிடம் புகார் செய்து தகுந்த நிவாரணம் பெறுவீர்கள். பணிச்மைகள் காரணமான மனக்குழப்பமும் துக்கமின்மையும் உண்டாகி பின்னர் சரியாகும். புத்திர பாக்கிய அமைப்பு அனுகூல நிலையில் உள்ளது. திருமணம் ஆன பெண்களுக்கு கணவராலும் அவர்தம் குடும்பத்தவராலும் நல்ல கவுரவமான நிலைகள் உருவாக்கித் தரப்படும். மாங்கல்ய ஸ்தானம் பலம் பெற தகுந்த வழிபாடு பூஜைகளிலும் பங்கு பெறுவது மங்கள வாழ்வைத் தரும்.

பரிகாரம்: முடிந்த வரை செவ்வாய்கிழமை தோறும் அருகிலிருக்கும் முருகன் கோவிலுக்குச் சென்று வலம் வரவும்.

மலர் பரிகாரம்: சனிக்கிழமை தோறும் முருகனுக்கு செவ்வரளிப் பூவால் மாலை கட்டி அர்ப்பணிக்கவும்.

சொல்ல வேண்டிய மந்திரம்: "ஓம் ஷட் ஷண்முகாய நம:".

அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், புதன்
அதிர்ஷ்ட திசைகள்: வடக்கு, வடமேற்கு
அதிர்ஷ்ட நிறங்கள்: வெள்ளை, வெளிர்பச்சை
அதிர்ஷ்ட எண்கள்: 2, 5

## சிம்மம்




(மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்)

கிரகநிலை: தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது தைரிய வீரிய ஸ்தானத்தில் சந்திரன் களத்திர ஸ்தானத்தில் சனி அஷ்டம ஸ்தானத்தில் ராகு, சுக்ரன்(வ), புதன் பாக்கிய ஸ்தானத்தில் சூர்யன் தொழில் ஸ்தானத்தில் குரு அயன சயன போக ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்.

பலன்: தன் மனதிற்கு சரியெனப்பட்டதை செயல்வடிவமாக்கி தனி வழியே நடைபோடும் சிம்மராசி அன்பர்களே!

இந்த வருடம் உங்களின் மனக்கவலைகள் மாறிவிடும். நல்லவர்களின் உதவி உங்கள் மனதை மகிழ்விக்கும். நீங்கள் பேசும் ஒவ்வொரு பேச்சும் மற்றவர்களால் வேத வாக்காக ஏற்றுக்கொள்ளப்படும். ஆன்மிக உணர்வுடன் செய்த நற்செயல்கள் தகுந்த பலனைத்தரும். வீடு, மனை, வாகன வகைகள் புதியவை வாங்கவும் இருப்பவற்றை சீர்திருத்தம் செய்யவும் நல்வாய்ப்புகள் வந்து சேரும்.

புத்திரர்களால் வருமான வரவுகள் உண்டாகி செலவுகளுக்கு கை கொடுக்கும். கடன்கள் அடைபடும். வழக்கு தொடர்பானவைகள் அனுகூலமாகும். கணவன் மனைவி இருவருக்கும் வரக்கூடிய மனக்கிலேசங்களை புத்திரர்கள் உறவு பாலமாக செயல்பட்டு சரிப்படுத்துவார்கள். ஆயுள் அபிவிருத்தி ஏற்படும்.

உத்தியோகஸ்தர்கள்: அரசுத்துறை மற்றும் தனியார் துறைகளில் உள்ளவர்கள் தங்கள் பணியின் பொருட்டு பல்வேறு இடங்களுக்கு கடந்த வருடத்தில் சென்று வந்திருப்பீர்கள். இதனால் ஒரு பலனும் இல்லையே என்று ஏங்கிய உங்களுக்கு குருபகவான் நிறைந்த அனுகூலத்தை தருகிறார். மனதில் புதிய உற்சாகமும் பொருளாதார வரவுகள் எதிர்கால வாழ்க்கையை உயர்த்தும் வகையில் பலன்கள் நடக்கும். உங்கள் உத்தரவுக்கு கட்டுப்பட தயக்கம் காட்டிய ஊழியர்கள் கூட உங்கள் சொல்லை மதித்து நடக்கும் நிலைகள் உண்டாகும்.

வியாபாரிகள்: இசைக்கருவிகள், வாசனைத் திரவியங்கள், அழகு சாதனப் பொருட்கள் மற்றும் அணிகலன்கள் வளையல், கவரிங் நகைகள் வியாபாரம் செய்பவர்கள் தங்கள் தொழிலில் கிடைக்கும். லாபவிகிதங்களை கணக்கில் கொண்டு புதிய மூலதன்ததை தொழிலில் போடுவார்கள். சொகுசான ஆடம்பர பொருட்கள் விற்பனை செய்பவர்கள் தங்கள் தொழில் நல்ல முன்னேற்றம் அடைந்து மேன்மை பெறுவார்கள். ரத்தினக்கற்கள் பதித்த நகைகளை விற்பனை செய்வோர் தொழில் முன்னேற்றம் காண்பர். பூஜைப் பொருட்களுக்கான கடை வைத்திருப்போர் நல்ல வியாபாரம் பெறுவார்கள்.

மாணவர்கள்: பரதநாட்டியம் கிராமிய நடனம் இசைக்கருவிகளை இயக்கும் பயிற்சி பெறும் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பயின்று தேர்ச்சி பெறுவார்கள். வாகன கட்டுமானப்பணிகள் ஓவியம் வரைவதற்கான பயிற்சி மாணவர்கள் புதிய யுக்கதிகளை அறிந்து நல்ல முன்னேற்றம் காண்பார்கள். மோட்டார் வாகனம் படகுகள் கப்பல் ஓட்டுவதற்கான பயிற்சி பெறும் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள்.

பெண்கள்: அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் நிர்வாகத்திடமிருந்து தேவையான சலுகைகளைப் பெறுவார்கள். சேமிப்பு செய்து பணத்தை குடும்பத்தின் சுப செலவுகளுக்காக பயன்படுத்துவார்கள். குடும்ப நிர்வாகத்தில் உள்ள பெண்கள் தங்கள் உறவினர்களிடம் அன்புடன் நடந்து கொள்வதால் உறவினர்களின் பாசப்பிணைப்பு குடும்ப மேன்மைக்கு உதவிக்கரமாகஇருக்கும். தகுந்த புகழும் நேர்மையான சமயத்தில் ஓய்வும் கிடைக்கப் பெற்று மன நிம்மிதியுடன் வாழ்க்கை நடத்துவீர்கள்.

பரிகாரம்: முடிந்த வரை வெள்ளிக்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று 11 முறை வலம் வரவும்.

மலர் பரிகாரம்: வெள்ளிக்கிழமை தோறும் சிவனுக்கு வில்வ மாலை சாற்றி தீபம் ஏற்றவும்.

சொல்ல வேண்டிய மந்திரம்: "ஓம் நமசிவாய".

அதிர்ஷ்ட கிழமைகள்: ஞாயிறு, வியாழன், வெள்ளி
அதிர்ஷ்ட திசைகள்: கிழக்கு, தெற்கு
அதிர்ஷ்ட நிறங்கள்: வெள்ளை, மஞ்சள்
அதிர்ஷ்ட எண்கள்: 1, 3, 6

## கன்னி




(உத்திரம் 2, 3, 4 பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2 பாதங்கள்)

கிரகநிலை: ராசியில் கேது தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சந்திரன் ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி களத்திர ஸ்தானத்தில் ராகு, சுக்ரன்(வ), புதன் அஷ்டம ஸ்தானத்தில் சூர்யன் பாக்கிய ஸ்தானத்தில் குரு லாப ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்.

பலன்: கடந்த காலங்களில் வீண் செலவுகள் குறைந்து சுபகாரிய செலவுகள் நிகழும். இருப்பினும் குரு கொஞ்சம் அலைச்சலான சூழ்நிலைகளை உருவாக்குவார்.

உங்கள் பேச்சும் செயலும் தெய்வாம்சம் பொருந்தியதாக இருக்கும். தைரியமான செயல்களைச் செய்து தகுந்த புகழை அடைவீர்கள் வீடு மனை வாகனம் ஆகியவற்றில் ஏற்படும் பராமரிப்பு செலவுகளை மனமுவந்து செய்வீர்கள். அருளும் பொருளும் நிரம்பப் பெறுவீர்கள். புத்திர வகை அனுகூலம் உண்டு. அரசுத்துறை சார்ந்த வகையில் கடன் வழக்கு பகை உருவாகும். உடல் நலத்தில் நன்கு கவனம் செலுத்தி வைத்திய முறைகளை தகுந்தவாறு மேற்கொள்வதால் ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும்.

தந்தை வழி சார்ந்த உறவினர்களால் உதவியோ துன்பமோ எதுவும் இல்லை. புதிய முயற்சிகள் மனம் நிறைந்த வெற்றியைத் தரும். தாய் செய்த புண்ணிய பலன்கள் தகுந்த நேரத்தில் உங்களை காத்துநிற்கும். விரயமான செலவுகள் அச்சத்தை ஏற்படுத்தினாலும் புதிய தொழில் வருமானங்கள் அதனை ஈடுகட்டும்.

வியாபாரிகள்: எந்த வியாபாரம் செய்பவராக இருந்தாலும் அவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். காகிதப்பொருட்கள் பயன்படுத்தி உருவாக்கப்படும் பொருட்களை வியாபாரம் செய்பவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். புதிய வாடிக்கையாளர்கள் கிடைத்து தொழிலில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். மனதில் நல்ல உற்சாகத்துடன் செயல்படுவீர்கள்.

மாணவர்கள்: கணிதம், வருமானவரி, வரவு செலவு தணிக்கை, நிர்வாகம், ஓவியப்பயிற்சி பெறும் மாணவர்கள் சிறப்பாக படிப்பர். விளையாட்டுகளில் சாகசம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பயிற்சி பெறும் மாணயவர்கள் புகழும் விருதும் பெறுவார்கள். மனம் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் தெய்வ வழிபாடுகள் நல்வழிப்படுத்தும். தைரியமான செயல்கள் செய்யும் வாய்ப்பு உருவாகும். நண்பர்கள் உதவிகரமாய் இருப்பார்கள்.

பெண்கள்: குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட விரையமான செலவுகளைப் பற்றி மனதில் எதுவும் எண்ணாமல் நற்பலன்கள் முழுதும் பெற ஆயத்தமாகுங்கள் . அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் பெண்கள் புதிய உத்வேத்துடன் கெயல்பட்டு மன நிறைவு பெறுவார்கள். ஆன்மிக எண்ணங்கள் வளர்ச்சி பெற்று புதிய சக்தியை உருவாக்கித்தரும். சமூகத்திலும் உறவினர்களிடமும் நற்புகழ் கிடைக்கும்.

பரிகாரம்: முடிந்த வரை புதன்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று 11 முறை வலம் வரவும்.

மலர் பரிகாரம்: புதன்கிழமை தோறும் ஐயப்பனுக்கு அரளிமாலை சாற்றவும்.

சொல்ல வேண்டிய மந்திரம்: "ஓம் ஸ்ரீமஹாவிஷ்ணவே நம:".

அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், புதன், வியாழன்
அதிர்ஷ்ட திசைகள்: தெற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு
அதிர்ஷ்ட நிறங்கள்: பச்சை, மஞ்சள்
அதிர்ஷ்ட எண்கள்: 2, 3, 5

துலாம் முதல் மீனம் வரை நாளை வெளிவரும்

## பெரம்பூர் சேமாத்தம்மன் கோவிலில்

# ரூ. 52 லட்சம் செலவில் மண்டபம் அமைக்கும் பணி!

### பி.கே. சேகர் பாபு அடிக்கல் நாட்டினார்!!

சென்னை, ஏப். 11–

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு இன்று திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு 74, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்காவில் அறிவியல் பூங்கா, ஏகாங்கிபுரத்தில் நவீன உடற்பயிற்சிக் கூடம், சேமாத்தம்மன் திருக்கோவிலில் மண்டபம் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு இன்று திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு 74க்குட்பட்ட பெரம்பூர் முரசொலி மாறன் பூங்காவில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி ரூ. 5.75 கோடி மதிப்பீட்டில் அறிவியல் பூங்கா அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர், வார்டு 74–க்குட்பட்ட ஏகாங்கிபுரம் முதல் தெருவில் மேயர் மேம்பாட்டு நிதி ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் நவீன உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணி மற்றும் மூலதன நிதி ரூ. 28.29 லட்சம் மதிப்பில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, வார்டு74–க்குட்பட்ட பெரம்பூர் சேமாத்தம்மன் திருக்கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.52 லட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் மண்டபம் அமைக்கும் பணிக்கு அமைச்சர் அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் ஆர்.பிரியா, திரு. வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜே. பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோவை குருடம்பாளையம் ஊராட்சி கதிர்நாயக்கன்பாளையத்தில் ரூ.98 லட்சம் மதிப்பிலான புதிய சாலை பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அமைச்சர் செந்தில்பாலாஜி தமிழக அரசின் திட்டம் குறித்து பேசினார். இதில் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கார்த்திக் மற்றும் நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்துக்கொண்டனர்.

## அமெரிக்காவில் பயங்கரம்:

# ஆற்றில் ஹெலிகாப்டர் விழுந்து 6 பேர் சாவு!

### தொழிலதிபர் குடும்பமே பலியான பரிதாபம்!!

நியூயார்க், ஏப். 11–

அமெரிக்காவில் உள்ள ஹட்சன் நதியில் சுற்றுலா ஹெலிகாப்டர் ஒன்று விழுந்து நொறுங்கிய விபத்தில் ஸ்பெயின் நாட்டு சிமென்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி, அவரது மனைவி மற்றும் மூன்று குழந்தைகள் உள்பட 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் ஹட்சன் நதி அமைந்துள்ளது. அங்குள்ள மன்ஹாட்டன் நகரைச் சுற்றிப் பார்க்க ஸ்பெயின் நாட்டு தொழிலதிபரின் குடும்பம் சென்றுள்ளது. ஸ்பெயின் நாட்டில் உள்ள சிமென்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்தவர் அகஸ்டின் எஸ்கோபார்.

இவர், சிமென்ஸ் மொபிலிட்டி பிரிவின் தென் மேற்கு ஐரோப்பாவின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும், ஸ்பெயின் நாட்டின் ஜெர்மன் வர்த்தக சபையின் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர். வட அமெரிக்காவில் சர்வதேச வணிக மேம்பாட்டுக்கான கார்ப்பரேட் இயக்குநராகவும் பதவி வகித்துள்ளார்.

இவர் தனது மனைவி மற்றும் மூன்று குழந்தைகளுடன் விடுமுறையில் பார்சிலோனாவில் இருந்து நியூயார்க் நகருக்கு சுற்றுலா சென்றார். இவர்களுடன் ஸ்பெயின் நாட்டு விமானியும் உடன் சென்றுள்ளார்.

இந்நிலையில், சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செலும் பெல் லாங் ரேஞ்சர் ரக ஹெலிகாப்டரில் எஸ்கோபார் குடும்பத்தினர் மன்ஹாட்டன் நகரை சுற்றிப் பார்க்க சென்றுள்ளனர். அமெரிக்க உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3 மணியளவில் ஹெலிகாப்டர் புறப்பட்டது.

இந்நிலையில் ஹெலிகாப்டர் கிளம்பிய 18 நிமிடங்களில் மன்ஹாட்டன் மற்றும் நியூ ஜெர்சி கடற்கரைக்கு இடையே உள்ள ஹட்சன் ஆற்றின் பியர் 40 என்ற பகுதியில் எதிர்பாராத விதமாக இந்த ஹெலிகாப்டர் தலைகீழாக விழுந்து நதியில் வேகமாக விழுந்து நொறுங்கியது. சுதந்திர தேவி சிலை உள்ளிட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஜார்ஜ் வாஷிங்டன் பாலத்தை நோக்கி திரும்பும்போது இந்த விபத்து ஏற்பட்டது.

நதியில் விழுந்த வேகத்தில் ஹெலிகாப்டரில் தீப்பற்றிக் கொண்டது. கொஞ்சம் கொஞ்சமாக ஹெலிகாப்டர் நீரில் மூழ்கத் தொடங்கியது. உடனடியாக இது குறித்து தகவல் கிடைத்ததும், தீயணைப்பு குழுவினர் மற்றும் மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்குச் சென்று ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கியவர்களை மீட்கப் போராடினர்.

இதில் ஹெலிகாப்டரில் பயணம் செய்த எஸ்கோபார் குடும்பத்தினர் உள்பட 6 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். நான்கு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், இரண்டு பேர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாகவும் மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இந்த ஹெலிகாப்டர் விபத்து காரணமாக, ஹட்சன் நதியை ஒட்டிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து ஸ்தம்பித்துப் போனது.

ஸ்பெயின் நாட்டு சுற்றுலா பயணிகள் 6 பேர் ஹெலிகாப்டர் விபத்தில் பலியான சம்பவத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள நியூயார்க் நகர மேயர், இறந்த 6 பேரின் உடல்களும் நதியில் இருந்து மீட்கப்பட்ட தாகவும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் கூறியுள்ளார்.

அகஸ்டின் எஸ்கோபார் குடும்பத்தினர் ஐந்து பேரும் ஹெலிகாப்டர் பயணத்திற்கு முன்பாக எடுத்துக்கொண்ட புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகியுள்ளது. அமெரிக்காவில் ஹெலிகாப்டர், விமான விபத்துகள் நடைபெறுவது தொடர்கதையாகி வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவில் பயணிகள் விமானமும், ராணுவ ஹெலிகாப்டரும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் 67 பேர் பலியாகினர். அதன் பிறகு அவ்வப்போது விமான விபத்துகள் தொடர்ந்து வருகின்றன.





பங்குனி உத்திரம் நாளான இன்று சேலம் மாநகரில் உள்ள அனைத்து முருகன் கோவில்களிலும் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர். இதையொட்டி முருகர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இடம் பேர்லேண்ட்ஸ் முருகன் கோவில்.





சென்னை வந்த மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா இன்று காலை மறைந்த தமிழக காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் இல்லத்துக்கு சென்று அவரது உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்திய போது எடுத்த படம் அருகில் தமிழிசை சௌந்தர்ராஜன் தமிழக பா .ஜனதா செயலாளர் கராத்தே தியாகராஜன் ஆகியோர் உள்ளனர்

## டாக்டர் ராமதாஸ் அறிவித்தாலும்

# சட்டப்படி அன்புமணி தான் பா.ம.க. தலைவர்!

### ஆதரவாளர்கள் அதிரடி அறிவிப்பு!!

சென்னை, ஏப். 11–

டாக்டர் ராமதாஸ் வாய் வழியாக அறிவித்தாலும் சட்டப்படி அன்புமணி தான் பா.ம.க. தலைவர் என அவரது ஆதரவாளர்கள் அதிரடியாக அறிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகளில் ஒன்றாக பா.ம.க. (பாட்டாளி மக்கள் கட்சி) திகழ்கிறது. இக்கட்சியின் நிறுவனராக டாக்டர் ராமதாஸ் உள்ளார். இதன் தலைவராக அவரது மகன் அன்புமணி ராமதாஸ் செயல்பட்டு வந்தார்.

இந்த நிலையில் கடந்த ஆண்டு (2024) டிசம்பர் 28 அன்று புதுச்சேரியில் பா.ம.க. பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் அக்கட்சியின் இளைஞரணித் தலைவர் நியமனம் குறித்த அறிவிப்பின்போது தந்தை, மகனுக்குஇடையே கருத்து மோதல் ஏற்பட்டது. டாக்டர் ராமதாஸ் தனது மகள் வழிப் பேரன் முகுந்தனை இளைஞரணித் தலைவராக அறிவித்தார். அதற்கு அன்புமணி எதிர்ப்பு தெரிவித்தார். அதைத் தொடர்ந்து டாக்டர் ராமதாஸ் யாராக இருந்தாலும் நான் சொல்வதைத் தான் இந்தக் கட்சியில் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்காதவர்கள் கட்சியில் இருந்து வெளியேறலாம் என தடாலடியாக அறிவித்தார்.

இதனால் கோபமடைந்த அன்புமணி மைக்கை வீசி விட்டு அங்கிருந்து வெளியேறினார். அப்போது பனையூரில் தான் கட்சி அலுவலகம் தொடங்க இருப்பதாகவும், தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் என்னை அங்கு வந்து சந்திக்கலாம் என கூறிவிட்டு சென்றுவிட்டார்.

இந்த உரசலை சரி செய்ய பா.ம.க. நிர்வாகிகள் மற்றும் மூத்த தலைவர்கள் தீவிர ஏற்பாடு செய்தனர். அதற்காக மறுநாளே திண்டிவனத்தை அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் கட்சி ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் டாக்டர் ராமதாஸ் மற்றும் அன்புமணிக்கிடையே சமரசம் செய்துவைக்கப்பட்டது. இருந்தாலும் இப்பிரச்சினை வெளியே தெரியாதவாறு நீரு பூத்த நெருப்பாக இருந்தது.

இந்நிலையில் நேற்று பா.ம.க. தலைமை அலுவலகமான தைலாபுரம் தோட்டத்தில் டாக்டர் ராமதாஸ் நிருபர்கள் கூட்டத்தைக் கூட்டினார். அதில் பா.ம.க. தலைவர் பதவியில் இருந்து அன்புமணி நீக்கப்படுகிறார். கட்சியின் நிறுவனராக இருக்கும் நான் தலைவர் பதவியையும் ஏற்றுக் கொண்டேன் என்றும் அதிரடியாக அறிவித்தார்.

இந்த அறிவிப்பு பா.ம.க. கட்சியில் மட்டுமின்றி தமிழக அரசியலிலும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த அறிவிப்பை தொடர்ந்து தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிர்வாகிகளும், தொண்டர்களும் குவிந்தனர்.

மேலும் தலைவர் பதவியில் இருந்து அன்புமணியை நீக்கிய டாக்டர் ராமதாசின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து திண்டிவனம் காமாட்சிஅம்மன்கோவில் தெருவில் உள்ள அவரது வீட்டின் முன்பு கூடி போராட்டம் நடத்தினார்கள். அப்போது அன்புமணிக்கு மீண்டும் தலைவர் பதவி வழங்கக் கோரி கோஷமிட்டனர்.

பா.ம.க. பொருளாளர் திலகபாமாவும், டாக்டர் ராமதாசின் இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தார். இது குறித்து அவர் தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் பா.ம.க.வின் ஜனநாயகம் கொலை செய்யப்பட்டுள்ளது. இது வரை ஐயா (டாக்டர் ராமதாஸ்) எடுத்த எல்லாமுடிவுகளும் சரியே. ஐயாவின் அன்பினை ருசித்தவள் நான். ஆனால் இந்த முடிவு தவறு. அன்புதானே எல்லாம் என பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று மாலை தைலாபுரம் தோட்டத்திற்கு டாக்டர் ராமதாசின் மகள்கள் ஸ்ரீகாந்தி, கவிதா, பா.ம.க. செய்தி தொடர்பாளர் பாலு, சிவக்குமார் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் சென்றிருந்தனர். அவர்கள் டாக்டர் ராமதாசைசமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே கட்சித் தலைவர்பதவியில்இருந்து நீக்கி டாக்டர்ராமதாஸ்அறிவித்திருந்தாலும் அன்புமணி தான் பா.ம.க. தலைவராக தொடர்ந்து நீடிக்கிறார் என அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

ஏனெனில் பா.ம.க.வைப் பொறுத்த வரை புதிய நிர்வாகிகள் அக்கட்சியின் சிறப்பு பொதுக்குழுவைக் கூட்டித்தான் நியமிக்கப்படுவார்கள். அதுபோன்றுதான் அன்புமணியும் தலைவர் பதவியில் நியமிக்கப்பட்டார்.

தற்போது தேர்தல் ஆணையத்தில் பா.ம.க. தலைவராக அன்புமணி பெயர்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்சி சட்டத்திட்டப்படி தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கான முடிவெடுப்பதற்கும் சிறப்பு பொதுக்குழுவுக்கே அதிகாரம் உண்டு. ஆனால் தற்போது டாக்டர் ராமதாஸ் வாய்வழி மூலமே அன்புமணியை தலைவர் பதவியில் இருந்து நீக்கியதாக அறிவித்துள்ளார். அவரை தலைவர் பதவியில்இருந்துநீக்குவதற்கு சிறப்பு பொதுக்குழுவைக் கூட்டி முடிவெடுத்து மட்டுமே அறிவிக்க முடியும். எனவே அன்புமணியை தலைவர்பதவியில் இருந்து டாக்டர் ராமதாஸ் நீக்கியிருப்பது சட்டப்படி செல்லாது.

அவரே தொடர்ந்து பா.ம.க. தலைவர் பதவியில் நீடிக்கிறார் என அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பா.ம.க. வில் தொடர்ந்து பரபரப்பும், குழப்பமும் ஏற்பட்டுள்ளது.

# ஆட்டோவில் சென்ற பெண்ணை கடத்தி கற்பழித்த கும்பல்!

### துப்பாக்கியால் சுட்டு ரோட்டில் வீசிய கொடூரம்!!

பரேலி, ஏப். 11–

ஆட்டோவில் சென்ற பெண்ணை காரில் கடத்திச் சென்ற கும்பல் அவரைக் கற்பழித்து துப்பாக்கியால் சுட்டு ரோட்டில் வீசிச் சென்றது.

உத்தரப் பிரதேசத்தில் நடந்த இச்சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:–

உத்தரப்பிரதேச மாநிலம் பரேலி பகுதியைச் சேர்ந்த பெண் சமோலி சம்பவத்தன்று இவர் பரேலியில் காந்தி உத்யான் என்ற இடத்தில் உள்ள ஒரு மருந்துக் கடைக்குச் சென்றிருந்தார். அங்கு மருந்து மாத்திரைகளை வாங்கிக் கொண்டு ஒரு ஆட்டோவில் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென 5 பேர் கொண்ட கும்பல் காரில் வந்தது. பின்னர் அவர்கள் சமோலி வந்த ஆட்டோவை வழிமறித்தனர்.

பின்னர் அதிலிருந்து சமோலியை தங்களது காரில் கடத்திச் சென்றனர். இந்நிலையில் அவர் உடலில் துப்பாக்கி குண்டு காயத்துடன் காந்தி உத்யான் பகுதியில் உயிருக்கு ஆபத்தான நிலையில் கிடந்தார். அவரை சிலர் மீட்டு மருத்துவ மனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து சமோலியின் உறவுக்கார பெண் பரேலி போலீசில் புகார் அளித்தார். அதில் தனது அத்தையைக் கடத்திச் சென்ற கும்பல் அவரை கற்பழித்து பின்னர் துப்பாக்கியால் சுட்டு நடுரோட்டில் வீசிச் சென்றதாக கூறியுள்ளார்.

இது குறித்து வழக்குப் பதிவு செய்த போலீசார் தீவிர விசாரணை நடத்தினார்கள். பின்னர் சமோலி குறித்த மருத்துவ அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் சமோலியின் உடலில் துப்பாக்கி குண்டு பாயவில்லை. அதை ஆபரேசன் மூலம் உடலுக்குள் செலுத்தி இருக்கிறார்கள் எனக் கூறப்பட்டிருந்தது. இதனால் போலீசார் குழப்பம் அடைந்துள்ளனர்.

சமோலிக்கு வேறு யாருடனாவது முன்விரோதம் இருந்ததா என விசாரணை நடத்தினார்கள். அப்போது இவருக்கும் வேறு ஒரு நபருக்கும் பிரச்சினை இருப்பதாகவும், இதுகுறித்தவழக்குவிசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாக அவர் அந்த கும்பலால் கடத்தப்பட்டு இச்சம்பவம் நடைபெற்று இருக்கலாம் என்றும் தெரியவந்தது.

அதைத் தொடர்ந்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி சமோலியைக் கடத்திச் சென்று கற்பழித்த கும்பலைச் சேர்ந்த 2 பேரை கைது செய்துள்ளனர். மேலும் பலரை வலைவீசித் தேடி வருகின்றனர்.

## இன்று காலையில்

# வீட்டிற்குச் சென்று தமிழிசைக்கு ஆறுதல் கூறிய அமித்ஷா!

### குமரி அனந்தன் படத்திற்கு அஞ்சலி!!

சென்னை,ஏப்.11–

சென்னை வந்துள்ள அமித்ஷா, முன்னாள் ஆளுநர் தமிழிசையின் இல்லத்திற்குச் இன்று காலை சென்று அவரது தந்தை குமரி அனந்தன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார். தமிழிசைக்கு ஆறுதல் கூறினார். குமரி அனந்தன் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

சென்னைக்கு நேற்று இரவு வந்த மத்திய உள்துறைஅமைச்சர்அமித்ஷா, கிண்டியில் உள்ள தனியார் ஓட்டலில் தங்கியுள்ளார். தமிழக பாஜக தலைவர் தேர்வு, 2026 பேரவைத் தேர்தல் கூட்டணி வியூகம் ஆகியவை குறித்து பாஜக மூத்த தலைவர்களுடன் அமித்ஷா ஆலோசனை நடத்தினார்.

இதற்கிடையே இன்று காலை, விருகம்பாக்கத்தில் உள்ள முன்னாள் ஆளுநர் தமிழிசையின் இல்லத்திற்கு அமித்ஷா சென்றார். தமிழிசையின் தந்தையும் காங்கிரஸ் மூத்த தலைவருமான குமரி அனந்தன் மறைவுக்கு அமித்ஷா இரங்கல் தெரிவித்தார். மேலும் தமிழிசைக்கு ஆறுதல் கூறினார். குமரி அனந்தன் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

## மாற்றுத் திறனாளிகள் குறித்து வார்த்தை:

# அமைச்சர் துரைமுருகன் வருத்தம் தெரிவித்தார்!

### இனி இது போன்ற நிகழ்வு நடக்காது என உறுதி!!

சென்னை,ஏப்.11–



மாற்றுத் திறனாளிகள் குறித்து பழைய வார்த்தையைப் பயன்படுத்தியதற்காக அமைச்சர் துரைமுருகன் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:

இயற்கையிலேயே உடலில் ஏற்பட்ட குறைபாடு உடையவர்களை அருவருக்கும் பெயர் கொண்டு, அவர்களை அழைத்து வந்ததை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கருணை உள்ளத்தோடு "மாற்றுத் திறனாளிகள்"" என்று பெயரிட்டு அழைத்தார். அதையே நாங்களும் பின்பற்றி வருகிறோம்.

அப்படிப்பட்ட நானே, ஒரு பொதுக்கூட்டத்தில் பேச்சின் வேகத்தில் மாற்றுத் திறனாளிகளை பழைய பெயரையே கொண்டு உச்சரித்து விட்டேன் என்று கழகத் தலைவர் தளபதி என் கவனத்திற்கு கொண்டு வந்தபோது, நான் அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தேன். கலைஞரால் வளர்க்கப்பட்ட நானே இப்படிப்பட்ட தவறை செய்தது மிகப் பெரிய தவறாகும். மாற்றுத் திறனாளிகள் உள்ளம் புண்பட்டிருக்கும். அதற்காக என் நிபந்தனையற்ற வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் தளபதி எந்தளவிற்கு வருந்தியிருப்பார் என்பது எனக்குத் தெரியும். அவருக்கும் என் வருத்தத்தை தெரிவித்து, இனி இத்தகைய நிகழ்வு நிகழாது என்று உறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு துரைமுருகன் குறிப்பிட்டுள்ளார்.

தினந்தோறும்
சினிமா செய்திகள்
வெளிவரும்

தமிழ்நாடுஅரசு / இந்து சமய அறநிலையத்துறை

**அருள்மிகு தீர்த்தபுரீஸ்வரர் திருக்கோயில்**

**திருவட்டத்துறை, திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.**

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்: செ.அ/3/2025/ நாள் : 07.04.2025

ஒப்பந்த வகைப்பாடு- இனம் விலை விகிதம்

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், திருவட்டத்துறை, அருள்மிகு தீர்த்தபுரீஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் அவர்களால் கீழ்காணும் விவரப்படியான பணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 17.04.2025 தேதி முதல் 06.05.2025 தேதி மாலை 5.45 மணிவரை பதிவிறக்கம் கீழ்கண்ட தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் (http://tntenders.gov.in) மூலம் செய்து கொள்ளலாம். 07.05.2025 பிற்பகல் 3.00 மணிவரை இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது பெறப்பட்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் 07.05.2025 அன்று மாலை 4.00 மணியளவில் இணையதளம் வாயிலாக திறப்பு செய்யப்படும். மேலும், முன்வைப்புத்தொகையினை இணையதளம் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். அனைத்து ஆவணங்களும் PDF–ஆக இணைக்கப்பட வேண்டும். முக்கிய விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே பெறப்பட வேண்டும். செய்தித்தாளில் வெளியிடப்படமாட்டாது.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தத்தொகை (GST 18% உட்பட) ரூ. | முன்வைப்புத் தொகை ரூ. | பணிமுடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்ததாரர் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், திருவட்டத்துறை, அருள்மிகு தீர்த்தபுரீஸ்வரர் திருக்கோயில் அனைத்து சன்னதிகள் பழுதுபார்த்து புதுப்பித்தல் பணி | **1,34,01,645/-** | **77,100/-** | **9 மாதங்கள்** | இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு பெற்ற ஸ்தபதி/ சிற்பி/சுதை/ தமிழ்நாடு அரசுதுறை / அரசு நிறுவனங்களில் பதிவு பெற்ற, நடப்பில் உள்ள ஒப்பந்ததாரர்கள |

செ.ம.தொ.இ/1475/ஒப்பந்தப்புள்ளி/2025

**செயல் அலுவலர்**

SEMAC

**சிமாக் கன்சல்டன்ட்ஸ் லிமிடெட்**

(முன்னர் ரேவதி எக்யூப்மெண்ட் லிமிடெட்)

CIN: L42900TZ1977PLC000780

பதிவு அலுவலகம்: பொள்ளாச்சி சாலை, மலுமிச்சம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர் – 641 050,

E-mail: compliance.officer@semacconsultants.com Website: www.semacconsultants.com Phone: 0422 6655100

**அறிவிப்பு**

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 110, பிரிவு 108ன் விதிகள் மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 மற்றும் செக்யூரிட்டீஸ் அன்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015ன் (பட்டியல் விதிமுறைகள்) ஒழுங்குமுறை 44, இந்திய நிறுவனச் செயலாளர்கள் நிறுவனம் (SS-2) திருத்தப்பட்ட முறையில் வெளியிட்ட பொதுக் கூட்டத்திற்கான செயலகத் தரநிலை மற்றும் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கும் / தபால் வாக்குச் சீட்டு செயல்முறையை நடத்துவதற்கும் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட பல்வேறு பொது சுற்றறிக்கைகள் எண்.08/2024 ("எம்சிஏ சுற்றறிக்கைகள்") ஆகியவற்றுக்கு இணங்க, தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளபடி மின்னணு வாக்குப்பதிவு உட்பட தபால் வாக்குச்சீட்டு மூலம் உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறுவதற்காக, ஏப்ரல் 8, 2025 செவ்வாய்க்கிழமை **('கட்ஆப் தேதி')** அன்று வைப்புத்தொகையாளர்கள்/நிறுவனத்தின் பதிவாளர்கள் மற்றும் பரிமாற்ற முகவரான **எம்யுஎப்ஜி இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்டி**ல்' ('RTA') இருந்து பெறப்பட்ட உறுப்பினர்களின் பதிவேட்டில்/பயன்படும் உரிமையாளர்களின் பட்டியலில் பெயர்கள் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு நிறுவனம் வியாழக்கிழமை, ஏப்ரல் 10, 2025 அன்று தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பின் மின்னணு பரிமாற்றத்தை நிறைவு செய்துள்ளது என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. பங்குதாரர்கள் இந்த அறிவிப்பை மின்னணு முறையில் பெறவும், தங்கள் வாக்கை மின்னணு முறையில் பதிவு செய்யவும் வசதியாக, நிறுவனம், எம்சிஏ சுற்றறிக்கைகளின்படி மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்வதற்காக நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவருமான **எம்யுஎப்ஜி இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்** உடன் ஏற்பாடு செய்துள்ளது. பங்குகளை காகித வடிவில் வைத்திருக்கும் பங்குதாரர்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்வதற்கான செயல்முறை மற்றும் வாக்களிக்கும் முறை ஆகியவை தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

தபால் வாக்குச் சீட்டு செயல்முறையை நியாயமானதாகவும், வெளிப்படையாகவும் நடத்துவதற்கான ஆய்வாளராக, M/s. நிதின் பரத்வாஜ் & அசோசியேட்ஸ், நொய்டா, நிறுவனச் செயலாளர்களின் உரிமையாளர் திரு. நிதின் பரத்வாஜ் ACS அவர்களை இயக்குனர்கள் குழு நியமித்துள்ளது.

மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதி (மின்னணு வாக்குப்பதிவு) அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உறுப்பினர்கள் தங்கள் மின்னணு வாக்குகளை RTA இணையதளத்தில் பதிவு செய்யலாம். மின்னணு வாக்குப்பதிவு முறையில் தபால் வாக்குச் சீட்டு மூலம் வாக்களிக்கும் செயல்முறை ஏப்ரல் 11, 2025 வெள்ளிக்கிழமை காலை 9:00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி மே 10, 2025 சனிக்கிழமை மாலை 5:00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடையும். மே 10, 2025 சனிக்கிழமை மாலை 05:00 மணிக்குப் பிறகு பெறப்படும் தபால் வாக்குச்சீட்டு படிவங்கள் செல்லுபடியாகாது மேலும் குறிப்பிட்ட தேதிக்கு மேல் வாக்களிக்க அனுமதிக்கப்படாது. மின்னணு வாக்குப்பதிவு முடிந்த 2 வேலை நாட்களுக்குள் தபால் வாக்குச்சீட்டின் முடிவுகள் அறிவிக்கப்படும்.

அறிவிப்பு மற்றும் முடிவுகள் நிறுவனத்தின் இணையதளமான www.semacconsultants.com, மின்னணு வாக்களிப்பு சேவை வழங்குனரான MIIPLன் இணையதளத்திலும் வெளியிடப்படும். மேலும், நிறுவனத்தின் சம பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகளான BSE லிமிடெட் (BSE) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் (NSE) ஆகியவற்றுக்கு இது தெரிவிக்கப்படும்.

பங்குதாரர்களுக்கு மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால் அது குறித்து, பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் [FAQs] மற்றும் உறுப்பினர்களுக்கான மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டை instavote.linkintime.co.inன் பதிவிறக்கப் பிரிவில் [உதவிப் பிரிவின் கீழ்] காணலாம் அல்லது enotices@in.mpms.mufg.com அல்லது compliance.officer@semacconsultants.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

ஏப்ரல் 8, 2025 செவ்வாய்க்கிழமை நிலவரப்படி நிறுவனத்தில் உறுப்பினராக இல்லாத ஒருவர் இந்த அறிவிப்பை தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே கருத வேண்டும்.

**சிமாக் கன்சல்டன்ட்ஸ் லிமிடெட்டிற்காக**
**(முன்னர் ரேவதி எக்யூப்மெண்ட் லிமிடெட்)**
**ஒப்பம்/–**
**ஆக்ரிதி குப்தா**
**நிறுவன செயலர் மற்றும் ஒப்புதல் அதிகாரி**

**தேதி : 09 ஏப்ரல், 2025**
**இடம்: குருகிராம்**

மேட்டுப்பாளையம் அருகே கோர விபத்து:

# ஆட்டோ மீது பைக் மோதி 3 வாலிபர்கள் பலி!

## 5 பேர் படுகாயம்!!

மேட்டுப்பாளையம், ஏப்.11–

மேட்டுப்பாளையம் அருகே ஆட்டோ மீது இரு சக்கர வாகனம் மோதிய கோர விபத்தில் 3 இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். காயமடைந்த ஐந்து பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அடுத்துள்ள ஆலாங்கொம்பு என்னுமிடத்தில் பயணிகளை ஏற்றி சென்ற ஆட்டோ மீது வேகமாக வந்த இரு சக்கர வாகனம் மோதிய பயங்கர விபத்தில் இரு சக்கர வாகனத்தில் வந்த 3 இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயியிழந்தனர்.

மேட்டுப்பாளையத்தில் சிறுமுகை செல்லும் சாலையில் உள்ளது ஆலாங்கொம்பு என்ற இடத்தில் காரமடை பகுதியை சேர்ந்த நிஜு(22), விதுன்(16), நகுலன்(17), வினித் என நான்கு இளைஞர்கள்(மைனர்சிறுவர்கள் உள்ளனர்) என நான்கு பேர் ஒரே இரு சக்கர வாகனத்தில் (பல்சர் பைக்) வேகமாக ஓட்டியபடி வந்துள்ளனர்.

அப்போது எதிரே வந்த பயணியர் ஆட்டோ மீது நான்கு பேர் பயணித்த மோட்டார் பைக் நிலை தடமாறி பயங்கர வேகத்துடன் மோதியது. இதில் நிஜு, விதுன் மற்றும் நகுலன் சம்பவ இடத்திலேயே பலியாகினர். வினித் பலத்த காயத்துடன் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை முடிந்து மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். இவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் இவ்விபத்தில் ஆட்டோ ஓட்டுநர் லிங்கேஸ்வரன்(32), ஆட்டோவில் பயணித்த பெட்டம்மாள்(40), பூவிதா(25), சௌந்தர்யா(25), மங்கம்மாள்(75) ஆகியோர் காயங்களுடன் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து குறித்து காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

போக்குவரத்து விதிகளை மீறி இருவர் பயணிக்கும் இரு சக்கர வாகனத்தில் நான்கு பேர் வந்தது அதிலும் வாகனத்தை வேகமாக இயக்கியது போன்றவை இந்த கோர விபத்திற்கு காரணமாக கூறப்படுகிறது. இந்த பயங்கர விபத்தும் உயிர் பலிகளும் இப்பகுதி மக்களை கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.



கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம், அவிநாசி பிரதான சாலை, பீளமேடு பகுதியில் நெடுஞ்சாலைத்துறை மூலமாக நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் உதவி ஆணையர் (பொ) முத்துசாமி, உதவிசெயற்பொறியாளர் முத்துக்குமார், உதவி பொறியாளர் நாசர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

ஒடிசாவில் இருந்து சேலம் வழியாக வந்த

# ரெயிலில் கடத்திய 20 கிலோ கஞ்சா பறிமுதல்!

## திருப்பூர் வாலிபர் கைது!!

சேலம் ஏப்ரல் 11

ஒடிசா, ஆந்திராவில் இருந்து சேலம் வழியே கேரளா செல்லும் ரயில்களில் கஞ்சா கடத்தப்படுவதை தடுக்க ரயில்வே போலீசார் தொடர்ந்து ரயில்களில் தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் சேலம் வழியாக வந்த திப்ருகர் கன்னியாகுமரி (விவேக் எக்ஸ்பிரஸ்) ரயிலில் நேற்று ரயில்வே பாதுகாப்புபடை போலீசாரும், போதை பொருள் தடுப்பு பிரிவு போலீசாரும் இணைந்துதீவிரசோதனை நடத்தினர். இதில், ஜோலார்பேட்டை ரயில்வே ஸ்டேஷனில் இருந்து அந்த ரயிலில் ஏறி, சேலம் ரயில் நிலையம் வரை ஒவ்வொரு பெட்டியாக சோதனையிட்டனர். இதில், முன்பதிவில்லா பெட்டியில் சந்தேகம்படும் படி பயணித்து வந்த ஒரு வாலிபரை சோதனை செய்தனர். அவர் வைத்திருந்த பையில் கஞ்சா கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரிடமிருந்து 20கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப் பட்டது. அவரிடம் போலீசார் விசாரித்தனர். அதில் அவர் திருப்பூரை சேர்ந்த கோபி (25) என்பதும் ஒடிசாவில் இருந்து கஞ்சாவை திருப்பூருக்கு கடத்தி வந்த தெரிந்தது. இதுபற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து, அவரை சேலம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



நவீன் பிரபஞ்சம் நடன குழு சார்பில் வள்ளி கும்மி நிகழ்ச்சி மருதமலை தைப்பூசம் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. 300–க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். நிகழ்ச்சியை அறங்காவலர் குழு சார்பாக ஒருங்கிணைத்து நடத்தினர்.

# அமைச்சர் பதவியில் இருந்து பொன்முடியை நீக்க வேண்டும்!

## காடேஸ்வரா சுப்பிரமணியம் அறிக்கை!!

கோவை,ஏப்.11–

இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;–

பெரியார் திராவிடர் கழக கூட்டத்தில் மாநில அமைச்சர் பொன்முடி அருவருக்கத்தக்க வகையில் இந்துக்கள் புனிதமாக கருதும் திருநீறு, திருமண் ஆகியவற்றை குறிப்பிட்டு பேசிய வீடியோ காட்சிகள் சமூக வலைதளத்தில் வைரலாகி உள்ளது. பெண்கள் இருக்கும் இடத்தில் பொதுக் கூட்டத்தில் விபச்சாரியிடம் உடலுறவை வைத்து சைவமா வைணவமா என கேட்டதாக கூறிப்பிடுகிறார்.

இத்தகைய கருத்தை பதவி பிரமாணம் எடுத்துக்கொண்ட அமைச்சர் பேசுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இந்த காரணத்திற்காகவே அவரது அமைச்சர் பதவியை நீக்கம் செய்யவும் முடியும்.

இது போன்ற அநாகரீக பேச்சுக்களை பல சமயங்களில் திமுக பின்னணி கொண்டவர்கள் பேசி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்துக்கள் வன்முறையில் இறங்குவதில்லை என்ற தைரியத்தில் தான் தி.மு.க., தி.க. போன்ற கட்சிகள் கண்டபடி பேசுகிறார்கள்.

இதுவே வேற்று மதத்தினர் குறியீடுகளை குறித்து யாராவது ஒருவர் பேசியிருந்தால், சமூக ஊடகத்தில் பதிவு செய்து இருந்தால் காவல்துறை நள்ளிரவில் பாய்ந்து சென்று கைது செய்து சிறையில் அடைத்து இருக்கும். இல்லை நீதிபதிகளே சமூக ஊடகத்தில் பார்த்ததற்கு நடவடிக்கை எடுக்க தானாக முன்வந்து கருத்து வெளியிட்டு இருப்பார்கள்.

அமைச்சர் பொன்முடி பேசியது இந்து விரோத கருத்து ஏற்புடையதா என்பதை திமுகவின் தலைவர் தமிழக முதல்வர் விளக்கம் தர வேண்டும்.

திமுக எம்பி ஆ. ராசா திமுகவினர் இந்து சமய சின்னங்களை அணியக்கூடாது என்று பேசினார். இதுபோன்ற பேச்சு திமுகவின் உள்நோக்கத்தை தமிழர்களுக்கு வெளிக்காட்டுகிறது.

திமுக தலைவர்களுக்கு இந்து சமய நம்பிக்கை இல்லாமல் இருப்பது அவர்களின் தனிப்பட்ட உரிமை.

ஆனால் திமுகவில் இருப்பவர்கள் சமய சின்னங்களை அணிய கூடாது என்பதும், இந்து சமய நம்பிக்கையை அமைச்சர் பொன்முடி கொச்சைப்படுத்தையும் இந்து முன்னணி வன்மையாக கண்டிக்கிறது.

அமைச்சர் பொன்முடி பேசிய அருவருக்கத்தக்க கருத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் கண்டித்து அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்து முன்னணி சார்பில் கேட்டுக்கொள்கிறோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கோடையை சமாளிக்க 6 வகை புதிய பீர்கள் அறிமுகம்!

## கர்நாடகம், தெலுங்கானாவில் இருந்து கொள்முதல்!!

சென்னை, ஏப்.11

கோடையை சமாளிக்க இந்த ஆண்டு 6 வகை புதிய பீர்களை டாஸ்மாக் அறிமுகப்படுத்த உள்ளது.

குளிர் காலத்தில் ஹாட் வகை என அழைக்கப்படும் விஸ்கி, பிராந்தி, ரம், ஜின் போன்ற மது வகைகள் அதிகம் விற்பனையாகும்.

புத்தாண்டு, பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகை நாட்களிலும் இவ்வகை மதுவே மிக மிக அதிகம் விற்பனையாகும். ஆனால் கோடை காலத்தில் பீர்கள் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன.

அந்த வகையில் இந்த ஆண்டு கோடையைச்சமாளிக்க 6 வகை புதிய பீர்களை டாஸ்மாக் அறிமுகப்படுத்த உள்ளது. இதற்காக கர்நாடகம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் இருந்தும் பீர்கள் இறக்குமதி செய்யப்பட உள்ளன.

இந்த புதிய வகை பீர்களில் ஏற்கனவே பிளாக் பஸ்டர் என்ற பெயரில் ஒரு ரகம் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது. இதை ஐதராபாத்தில் உள்ள லீலா சன்ஸ் அல்கோ என்ற நிறுவனம் தயாரிக்கிறது.

மீதி 5 ரக பீர்கள் விரைவில் விற்பனைக்கு வர உள்ளன. அதில் ஒரு பீரை மேலே கூறப்பட்ட லீலா சன்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. மற்ற 4 வகை பீர்களை கர்நாடகத்தைச் சேர்ந்த உட்பெக்கர் டிஸ்டில்லரிஸ் நிறுவனம் தயாரிக்கின்றது.

இவை யாவும் இந்த மாத இறுதிக்குள் விற்பனைக்கு வந்துவிடும். இந்தப் புதிய வகை பீர்களின் பெயர் விவரம் வருமாறு:–1. பிளாக் பஸ்டர்ஸ் ஸ்ட்ராங், 2. பிளையிங் மங்கி வீட் லேஜர், 3. உட்பெக்கர் வீட் லேஜர், 4. உட்பெக்கர் கிரெஸ்ட் சூப்பர் ஸ்ட்ராங்க், 5. கண்டர் சூப்பர் ஸ்ட்ராங்க், 6. பிளாக் போர்ட் சூப்பர் ஸ்ட்ராங்க். இவ்வகை பீர்கள் பைண்ட் (330 மில்லி), டின் (490 மில்லி) மற்றும் பாட்டில் (650 மில்லி) ஆகியவற்றில் விற்பனை செய்யப்படும்.

650 மில்லி ஸ்ட்ராங் பீர் விலை ரூ.182 ஆகும். லேஜர் வீட் பீர் விலை ரூ.250. ஏற்கனவே விற்பனையில் உள்ள பீர்களின் விலைகள் ரூ.140 முதல் ரூ.210 வரை உள்ளன.

இந்த புதிய வகைகளில் லேஜர் பீர்கள் உள்நாட்டு கோதுமையில் இருந்து தயாரிக்கப்படுகின்றன.

டாஸ்மாக் நிறுவனத்தைப் பொறுத்த வரை கடந்த ஆண்டு ஏப்ரல் 1 முதல் 7 வரையிலான கால கட்டத்தில் 9.05 லட்சம் பெட்டி பீர்கள் விற்பனையாகின. ஆனால் இந்த ஆண்டு அதே காலகட்டத்தில் 7.97 லட்சம் பீர்கள் மட்டுமே விற்பனை ஆகியுள்ளன.

ஆகவே இந்த விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு புதிய பீர்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. டாஸ்மாக்கை பொறுத்தவரை தற்போது 35 வகையான பீர்கள் பட்டியலில் உள்ளன.

இருந்தாலும் 10–க்கும் குறைவான பீர்கள் தான் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



கோவை சுக்கிரவாரப் பேட்டையில் உள்ள பாலதண்டாயுதபாணி கோவிலில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு, சிறப்பு அலங்காரத்தில் முருகர் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

கேரள லாட்டரியில் அடித்தது யோகம்:

# சேலம் அதிர்ஷ்டசாலிக்கு ரூ.10 கோடி பரிசு!

## ‘தனது முழு விபரத்தை உடனே வெளியிட வேண்டாம்’ என வேண்டுகோள்!!

பாலக்காடு,ஏப்.11

கேரளாவில் கோடைக்கால பம்பர் லாட்டரி குலுக்கல்லில் சேலத்தைச் சேர்ந்த நபருக்கு லாட்டரியில் ரூ.10 கோடி பரிசு கிடைத்துள்ளது. 1 வார காலத்துக்கு பிறகு தற்போது தெரியவந்துள்ளது.

கேரளாவில் பண்டிகை காலங்களில் பெரும் பரிசுத் தொகை கொண்ட பம்பர் லாட்டரி விற்பனை நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் கோடைக் கால பம்பர் லாட்டரி விற்பனைக்கான குலுக்கல் கடந்த ஏப் 2ஆம் தேதி நடந்து முடிந்தது. ரூ.250 விலை கொண்ட எஸ். ஜி. 513715 என்ற எண்ணுடைய லாட்டரி டிக்கெட்டுக்கு ரூ.10 கோடி பரிசுத் தொகை விழுந்தது.

இந்த லாட்டரி டிக்கெட் பாலக்காட்டில் உள்ள கிங்ஸ் ஸ்டார் ஏஜென்சி என்ற லாட்டரி கடை மூலம் விற்பனை செய்யப்பட்டது தெரிய வந்தது. ஆனால் ரூ.10 கோடி பரிசுத் தொகை வென்ற அதிர்ஷ்டசாலி யார் என்ற விபரம் மட்டும் கடந்த ஒரு வார காலமாகியும் தெரியாமல் இருந்தது. பாலக்காடு, தமிழகத்தின் எல்லையோரம் அமைந்திருப்பதால் தமிழர்கள் எவரேனும் அந்த லாட்டரி டிக்கெட்டை வாங்கியிருப்பார்களோ என்ற எதிர்பார்ப்பும் காணப்பட்டது. சில நேரங்களில் பரிசுத் தொகை வென்றவர்கள் விபரம் தெரிந்தால், உறவினர்கள் அவர்களிடம் பணம் கேட்டு நச்சரிப்பார்கள் என்பதால் அவர்களுடைய விபரத்தை சிலர் ரகசியமாக வைத்துக் கொள்வதுண்டு.

இந்நிலையில், தமிழ்நாட்டை சேர்ந்த ஏஜெண்ட் ஒருவர் 180 டிக்கெட்டுகளை தனலட்சுமி என்ற பெயரில் வாங்கியதும், அதில் இருந்த ஒரு லாட்டரி சீட்டுக்குத் தான் தற்போது பரிசு விழுந்திருக்கிறது என்பது தெரிய வந்தது.

இந்நிலையில் சேலத்தைச் சேர்ந்த நபருக்கு ரூ.10 கோடி முதல் பரிசு கிடைத்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. அந்த நபர் தனது லாட்டரி சீட்டை கேரள லாட்டரி அலுவலகத்தில் சமர்ப்பித்து பரிசுத் தொகையை கோரியுள்ளார், மேலும் தனது விபரத்தை வெளியிட வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கோரிக்கை விடுத்துள்ளார். கேரள லாட்டரி விதிகளின்படி வெளி மாநிலத்தவர் கேரளாவுக்கு வந்து லாட்டரி டிக்கெட்டை வாங்கியிருந்தால் மட்டுமே பரிசுத்தொகை கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. கள்ளச் சந்தையில் லாட்டரி சீட்டு வாங்கியிருந்தால் பரிசுத் தொகை கிடைக்காது. இந்த விபரங்கள் சரி பார்க்கப்பட்ட பிறகே சேலம் நபருக்கு பரிசு வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு முன்பு,

கடந்த 2023 ஆம் ஆண்டு ஓணம் பம்பர் லாட்டரியில் திருப்பூரை சேர்ந்த 4 பேருக்கு முதல் பரிசு கிடைத்தது. இவர்கள் கள்ளச் சந்தையில் லாட்டரி வாங்கியதாக புகார் எழுந்தது. எனினும் உரிய விசாரணைக்குப் பிறகு அவர்களுக்கு பரிசுத் தொகை அளிக்கப்பட்டது.

தற்போது அடுத்த அதிர்ஷ்ட குலுக்களான ரூ.12 கோடி பரிசுத் தொகைக்கான விஷு பம்பர் லாட்டரி விற்பனை கேரளாவில் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

எஸ்.பி. வேலுமணிக்கு நெருக்கமான

# என்ஜினீயர் சந்திரசேகர் அ.தி.மு.க.வில் இருந்து விலகியது ஏன்?

## பரபரப்பு தகவல்கள்!

கோவை,ஏப்.11–

அதிமுகவில் இருந்து விலகுவதாக, அக்கட்சியின் எம்ஜிஆர் இளைஞரணி மாநில இணைச்செயலாளராக பதவி வகித்து வந்த கோவையைச் சேர்ந்த இன்ஜினியர் சந்திரசேகர் அறிவித்துள்ளார். முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணிக்கு நெருக்கமான இவரது விலகல் அறிவிப்பு கோவை அதிமுகவில் அதிர்ச்சியைக் ஏற்படுத்தி உள்ளது.

கோவை, வடவள்ளி பகுதியை சேர்ந்தவர் இன்ஜினியர் சந்திரசேகர்.

தொடக்கத்தில், கோவை புறநகர் தெற்கு மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரணி செயலாளராக இருந்தார். பின்னர், சில ஆண்டுகளுக்கு முன்னர், அதே அணிக்கு மாநில இணைச் செயலாளராக நியமிக்கப்பட்டார். இவரது மனைவி சர்மிளா. கோவை மாநகராட்சியின் 38வது வார்டு அதிமுக கவுன்சிலராக உள்ளார். அ.தி.மு.க., ஆட்சி காலத்தில், முன்னாள் அமைச்சர் வேலுமணியின் நெருங்கிய நண்பர் மற்றும் வலது கரமாக கட்சியினரால் அறியப்பட்டவர். அச்சமயத்தில் அதிகார மிக்கவராக வலம் வந்தார். கட்சியினர் மட்டுமின்றி, அரசு அதிகாரிகளும் அவரது இல்லத்துக்குச் சென்று காரியங்கள் சாதித்து வந்தனர்.

கடந்த, 2021 சட்டசபை தேர்தலில், கோவை வடக்கு தொகுதியில் போட்டியிட விரும்பினார். தெற்கு தொகுதி யை பா.ஜ.,வுக்கு ஒதுக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டதால், மாநகர் மாவட்ட செயலாளர் அம்மன் அர்ஜுனனுக்கு வடக்கு தொகுதி வழங்கப்பட்டது.

அதனால், உள்ளாட்சி தேர்தலில் அவரது மனைவி ஷர்மிளாவை போட்டியிடச் செய்து, மேயராக்க திட்டமிட்டனர். அதன்படி, அவரது மனைவியும், 38வது வார்டில் போட்டியிட்டு, கவுன்சிலரானார். அத்தேர்தலில் மூன்று வார்டுகளில் மட்டுமே அ.தி.மு.க., வெற்றி பெற்றதால் மேயர் கனவு கலைந்தது.

கடந்த, 2022ல் வேலுமணி வீடு மற்றும் அவரது நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் லஞ்ச ஒழிப்பு துறை சோதனை செய்த போது, சந்திரசேகரும் சிக்கினார். அவரது வீட்டில் ஒன்பது மணி நேரம் சோதனை நடந்தது. ஆவணங்கள், லேப்டாப் உள்ளிட்ட பொருட்களை போலீசார் கைப்பற்றிச் சென்றனர்.

கடந்த ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் கோவை தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என சந்திரசேகர் எதிர்பார்த்து இருந்தார். ஆனால் அவருக்கு பதிலாக சிங்கை இராமச்சந்திரனுக்கு வாய்ப்புவழங்கப்பட்டது.

அச்சம்பவத்துக்கு பின், அ.தி.மு.க., நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்களில் பங்கேற்காமல் ஒதுங்கியே இருந்தார். தேவைப்படும் சமயங்களில் மட்டும் தலைகாட்டி வந்தார். அவரை தி.மு.க.,வுக்கு இழுப்பதற்கான முயற்சிகள் சில மாதங்களாக மறைமுகமாக நடந்து வந்தது. மேலும் கடந்த மாதத்தில் நடைபெற்ற முன்னாள் அமைச்சர் வேலுமணியின் மகன் திருமண விழாவிலும் இன்ஜினியர் சந்திரசேகருக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

இதற்கிடையே, தனிப்பட்ட காரணங்களுக்காக, கட்சியில் உள்ள அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகுவதாக, சந்திரசேகர் நேற்றிரவு அறிக்கை வெளியிட்டார். இதுதொடர்பாக, சமூக வலைதள பக்கங்களிலும் வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள கடிதத்தில், ‘‘கடந்த 20 ஆண்டு காலம் அதிமுகவில் முழு அளவி’ல், உண்மையுடன் உழைத்து வந்தேன். கட்சியின்உத்தரவை கடமைதவறாமல் கடைபிடித்துகாத்து வந்துள்ளேன். கட்சியில் எதிர்பார்ப்பு இன்றி பணியாற்றி உள்ளேன். மக்களுக்கான சேவை பணிகளிலும், மக்களோடு மக்களாக நின்று போராடி இருக்கிறேன். கட்சிக்காக நான் செய்த பணிகள் அனைவரும் அறிந்ததே.

தற்போது எனது தனிப்பட்ட பணி காரணமாக தொடர்ந்து கட்சிப் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியாத சூழல் உள்ளது. எனவே, கட்சியின் அனைத்து வித பொறுப்புகளில் இருந்தும் என்னை முழுமையாக விடுவித்துக் கொள்கிறேன். கட்சியில் இருந்து விலகும் முடிவை பலத்த தயக்கத்துடன் எடுத்துள்ளேன். கட்சியில் எனக்கு வாய்ப்பு அளித்த, அங்கீகாரம் மற்றும் ஆதரவு வழங்கி, திறம்பட பணியாற்ற ஊக்கம் தந்த மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, பொதுச் செயலாளர் பழனிசாமி, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கட்சியின் தொண்டர்கள் அனைவருக்கும்நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்’’ எனக் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து கோவை அதிமுக நிர்வாகிகள் தரப்பில் கேட்ட போது,‘‘ இன்ஜினியர் சந்திரசேகரின் அறிக்கையை பார்த்து தான் அவர் கட்சியில் இருந்து விலகும் முடிவை எடுத்ததை அறிந்தோம். மாவட்ட செயலாளருக்கோ, பொதுச்செயலாளருக்கோ எந்த தகவலும் இதுவரை தெரிவிக்கவில்லை’’என்றனர்.

இன்ஜினியர் சந்திரசேகர், ஒப்பந்த நிறுவனம் நடத்தி வருகிறார். கடந்த அதிமுக ஆட்சிக்காலத்தில் மாநகராட்சி திட்டப்பணிகளை அவர் ஒப்பந்தம் எடுத்து நடத்தி வந்தார். அதிமுகவினர் அதிகாரப்பூர்வ நாளிதழான ‘நமது அம்மா’ நாளிதழின் வெளியீட்டாளராகவும் சந்திரசேகர் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இவர் கட்சியில் இருந்து விலகியுள்ளதால், இவரது மனைவி சர்மிளா அதிமுக கவுன்சிலராக தொடர்வாரா?, என்ன முடிவு எடுப்பார் எனவும் கேள்வி எழுந்துள்ளது. இதற்கிடையே, அவரது விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்ளாமல், அவரை சமாதானப்படுத்தும் முயற்சிகளிலும் உள்ளூர் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கிடையே இன்ஜினியர் சந்திரசேகர் பாஜகவில் சேரப் போகிறார் என்றும் திமுகவில் இணையப் போகிறார் என்றும் பல விதமான தகவல்கள் பரவி வருகிறது. இது அதிமுக கட்சியினரிடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


**மேதகு சிறப்பு சார்பு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம், கோயமுத்தூர்.**

M.C.O.P. No. 1058 OF 2024

க.சரவணன்

மனுதாரர்

–எதிர்–

க.ஜோதிபாஸ், த/பெ. கனிஅப்பன்
18D1, காமராஜர் நகர்,
பெரியநாயக்கன்பாளையம்,
கோயமுத்தூர்- 641020.

...2-ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனக்கு ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்திற்கு இழப்பீடு கோரி தாக்கல் செய்திருக்கும் மேற்படி மனுவானது தாங்கள் ஆஜராகும் பொருட்டு 03.06.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகவே, தாங்கள் மேற்படி தேதியில், மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு ஆஜராக தவறும் பட்சத்தில் மேற்படி மனுவானது தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும்.

**S.கார்த்திக்,** BCS., LL.B.,
வழக்கறிஞர், கோயமுத்தூர்.

# 24 மணி நேர குடிநீர் திட்டப்பணி இறுதி கட்டத்தை எட்டியுள்ளது!

## அமைச்சர் செந்தில்பாலாஜி பேட்டி!!

கோவை,ஏப்.11

கோவை மாவட்டத்தில் ரூ.54 கோடியே 60 லட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தும், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்தார். கோவை ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி திறந்தவெளி அரங்கத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்,

அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.1 கோடியே 68லட்சம்மதிப்பீட்டில் மூன்று சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை மாற்றுத்திறனாளிகளுக்கு அமைச்சர் செந்தில்பாலாஜிவழங்கினார், அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது;

கோவை மாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு புகுதிகளில் ரூ54கோடியே 60 லட்சம் மதிப்பிலான புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற பணிகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளது, கோவை மாநகராட்சியின் வளர்ச்சியில் முதல்வர் தனிகவனம் செலுத்தி கொண்டு இருக்கிறார், அதே போல தொடங்கப்பட்டு இருக்கும் பணிகளையும் விரைவாக முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்றும் முதல்வர் அறிவுறுத்தியுள்ளார்.

அதே போல கோவையில் உள்ள விநாயகபுரம் பகுதியில் வட்டறாரப் போக்குவரத்து கழக அலுவலகம் கட்டுவதற்கானஅடிக்கல் நாட்டுவிழாவிற்கான அந்த பகுதியை தேர்வு செய்து இருந்தோம்ஆனால் அப்பகுதி மக்கள் எங்களுக்கு விளையாட்டு மைதானத்திற்காக அந்த பகுதி வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்,

அதனால் அவர்களின் கோரிக்கையை ஏற்று மாற்று இடத்தில் வட்டார போக்குவரத்து அலுவலகம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்து இருக்கிறோம். இதை சொன்னவுடன் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியாக விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தி தர வேண்டும என கோரிக்கை விடுத்தனர்.

அதையும் ஏற்றுக்கொண்டு விரைவில் செய்து கொடுக்கிறோம். கோவை மாவட்டத்தை பொருத்தவரை இந்த ஆண்டு குடிநீர் பற்றாக்குறை என்பது வரவே வராது,

அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு இருக்கிறது.

தேவைப்படக்கூடியபணிகளையும் விரைவாக செய்து முடிக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது, 24மணி நேரகுடிநீர் திட்டப்பணி இறுதி கட்டத்தை எட்டியுள்ளது,

குடிநீர் திட்டப்பணிகள் மட்டுமல்ல கோவை மக்களுக்கு என்னென்ன தேவை இருக்கிறதோ ? அதே போல ஊரக பகுதி சாலைகளை மேம்படுத்துவதற்கு ஏறத்தாழ ரூ.30 கோடி இந்த ஆண்டு முதல்வர் வழங்கி இருக்கிறார், இதற்கான ஒப்புதல்கிடைக்கப்பெற்றவுடன் ஊராட்சி பகுதிகளில் சாலைகள் அமைக்கும் பணி தொடங்கப்படும்,

சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியம் என்பது சாதாரணமாக ஒரு வாரத்தில் செய்யக்கூடிய வேலை அதற்கான இடங்களை தேர்வு செய்து வடிவமைப்புகளைதயார் செய்து திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டி உள்ளது, கிரிக்கெட் வாரியத்தின் ஒப்புதலை பெற்றால் மட்டும் தான் சர்வதேச போட்டிகளை கூட நடத்த முடியும் அதற்கான பணிகள் கடைசி கட்டத்தை இரவு நேரங்களில் அதிக மின்வெட்டு ஏற்படுகிறது என்று இது வரை எந்த புகாரும் மின்வாரியத்திற்கு வரவில்லை ஏதாவது பழுது காரணமாக கூட மின்வெட்டு ஏற்பட்டு இருக்கலாம் யாராவது குறிப்பிட்டு கூறினால் அதை ஆய்வு செய்து கொடுக்கிறேன் . தேவைக்கு அதிகமான மின்சாரம் தற்போது நமக்கு கிடைத்துக் கொண்டு இருக்கிறது, கோடை காலத்தில் மிக சிறப்பாக எந்தவித தடையும் இல்லாமல் சீரான மின்சாரம் கிடைக்க வழிவைாக செய்து கொடுக்கிறோம், இவ்வாறு அமைச்சர் செந்தில்பாலாஜி கூறினார்,

இந்த நிகழ்வின் போது, மாவட்ட கலெக்டர் பவன் குமார், மேயர் ரங்கநாயகில மாநராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன், ஈஸ்வரசாமி, துணை மேயர் வெற்றிச்செல்வன், மாவட்ட செயலாளர்கள் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் தொ,அ, ரவி, தளபதி முருகேசன், மண்டலத்தலைவர்கள்,நிலைக்குழு தலைவர்கள், கவுன்சிலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஜி.கே.என்.எம் மருத்துவமனையில் புற்று நோய் சிகிச்சைக்கான நவீன மெஷின் அறிமுகப்படுத்தப்பட்டது. உடன் டாக்டர்கள் சிவனேசன், மனோகரன், கார்த்திகா, கலெக்டர் பவன்குமார், சி.இ.ஓ., ரகுபதி வேலுச்சாமி ஆகியோர் உள்ளனர்.

# ஜி.கே.என்.எம். மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைக்கு நவீன இயந்திரம்!

கோவை, ஏப்.11

ஜி.கே.என்.எம் மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சையில், சிகிச்சை தரத்தை மேம்படுத்தும் வகையில், ட்ரூபீம்ஹைப்பர்ஆர்க் லீனியர் ஆக்சிலரேட்டர் எனும் நவீன இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம், நோயாளிகளுக்கு துல்லியமான சிகிச்சை அளிக்கவும், கதிர்வீச்சு துல்லியமாக வழங்கவும், சிகிச்சையின் போது ஆரோக்கியமான திசுக்களுக்கு சேதம் குறைவாக ஏற்படுத்தும் பல்வேறு நவீன செயல்பாடுகளை கொண்டுள்ளது. புதிய இயந்திரம் பயன்பாட்டை, கோவை கலெக்டர் பவன் குமார் மற்றும் ஜி.கே.என்.எம் மருத்துவமனை தலைமை நிர்வாக அதிகாரி ரகுபதி வேலுச்சாமி ஆகியோர் துவக்கி வைத்தனர். கதிர்வீச்சு புற்றுநோயியல் துறைத்தலைவர் கார்த்திகா சிவப்பிரகாசம் புதிய தொழில்நுட்பம் குறித்து விளக்கமளித்தார். நிகழ்வில், மருத்துவமனை புற்றுநோயியல் துறை டாக்டர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் பங்கேற்றனர்.

### பூப்பெய்திய மாணவியை தனிமைப்படுத்தி

# தேர்வு எழுத வைத்த தனியார் பள்ளி முதல்வர் சஸ்பெண்ட்!

பொள்ளாச்சி, ஏப்.11–

பூப்பெய்திய மாணவியை வெளியே அமர்ந்து தேர்வு எழுத வைத்த பள்ளியின் முதல்வர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தாலுகா செங்குட்டுப்பாளையத்தில் தனியார் மெட்ரிக் பள்ளி செயல்பட்டு வருகின்றது.

இப்பள்ளியில் சுற்று வட்டார பகுதியை சேர்ந்த மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். கடந்த வாரம் இப்பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவர் பூப்பெய்தி உள்ளார். தற்போது பள்ளியில் முழு ஆண்டு தேர்வு நடைபெற்று வருவதால் பெற்றோர் பள்ளி நிர்வா கத்திடம் பேசி தேர்வு எழுத வழிவகை செய்யுமாறு கேட்டுள்ளனர்.

இதையடுத்து கடந்த 7ம் தேதி மாணவி தேர்வு எழுத பள்ளிக்கு சென்றுள்ளார். அப்போது வகுப்பறைக்கு வெளியே உள்ள படிக்கட்டில் அமர்ந்து தேர்வு எழுத சொல்லி உள்ளனர்.

கடந்த 9ம் தேதி அடுத்த தேர்வு எழுத சென்றுள்ளார். அப்போதும் வெளியில் உள்ள படிக்கட்டில் அமர்ந்து தேர்வு எழுதுமாறு கூறியுள்ளனர்.தகவல் அறிந்த மாணவியின் தாயார் பள்ளிக்கு சென்று மகள் படிக்கட்டில் அமர்ந்து தேர்வு எழுதுவதை பார்த்து, பள்ளி முதல்வர் ஆனந்தியிடம் கேள்வி எழுப்பி உள்ளார். அவர் சரியான பதிலளிக்காமல் மிரட்டல் தொனியில் பேசியதாக கூறப்படுகின்றது. இதையடுத்து மாணவியின் தாயார் தனது செல்போனில் படிக்கட்டில் அமர்ந்து மகள் தேர்வு எழுதுவதை வீடியோவாக எடுத்துள்ளார். இது சமூக வலைத்தளத்தில் வெளியானது.

இதுதொடர்பாக மாணவியின் பெற்றோர் நேற்று பொள்ளாச்சி ஏடிஎஸ்பி சிருஸ்டி சிங்கிடம் புகார் அளித்தனர். இந்நிலையில் மாவட்ட பள்ளி கல்வி துறை உதவி இயக்குனர் வடிவேல் பள்ளிக்கு சென்று சம்மந்தப்பட்ட மாணவி, பெற்றோர் மற்றும் பள்ளி நிர்வாகத்தினரிடம் விசாரணை நடத்தினார். இது போன்ற செயல்கள் பொள்ளாச்சி கல்வி மாவட்டத்தில் உள்ள பிற பள்ளிகளில் உள்ளதா? என்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே தனியார் பள்ளி தாளாளர், மாவட்ட கல்வி அலுவலருக்கு அனுப்பி உள்ள கடிதத்தில், மாணவியை வெளியில் அமர வைத்தது இலவச கட்டாய கல்வி சட்ட விதி 17ன் படி தவறு என்றும், பள்ளி முதல்வர் ஆனந்தியின் செயல்பாடு சட்டத்திற்கு புறம்பானதால் அவரை தற்காலிக பணி நீக்கம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

**பொறுத்து கொள்ள முடியாது கல்வி அமைச்சர் எச்சரிக்கை**

தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகஷே் பொய்யாமொழி வெளியிட்டுள்ள அறிக்கையில், சம்மந்தப்பட்ட தனியார் பள்ளி மீது துறை ரீதியான விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பள்ளி முதல்வர் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குழந்தைகள் மீதான ஒடுக்குமுறை எவ்வகையாயினும் பொறுத்துக் கொள்ள முடியாது. அன்பு மாணவி தனியாக அமர வில்லை. நாங்கள் இருக்கிறோம். இருப்போம் என கூறி உள்ளார்.பள்ளியின் முதல்வர் மற்றும் நிர்வாகத்தின் மீது மாணவியின் பெற்றோர் பொள்ளாச்சி ஏடிஎஸ்பியிடம் புகார் மனு அளித்துள்ளனர்.

அதில் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி இருந்தனர். இந்த புகாரின் பேரில் தாளாளர் தங்கவேல் பாண்டியன், பள்ளி முதல்வர் ஆனந்தி, அலுவலக உதவியாளர் சாந்தி ஆகியோர் மீது நெகமம் போலீசார் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# நீலகிரி கலை கல்லூரியின் 13 -ம் ஆண்டு விழா!

## திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு!!

கோவை, ஏப்.11

பந்தலூர் அருகே தாளூர் பகுதியில் செயல்பட்டு வரும் நீலகிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 13 ம் ஆண்டு கல்லூரி தினம் மயூகா என்ற பெயரில் இரண்டு நாட்கள் நடைபெற்றது.

முதல் நாளில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நீலகிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின்மேலாண்மை இயக்குனரும், பாரதியார் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினருமான முனைவர் ரஷீத்கஸ்ஸாலி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் பாலாசண்முக தேவி துணை முதல்வர் முனைவர் ரஞ்சித், நிர்வாகக்குழு துணைத்தலைவர் பேராசிரியர் மோகன்பாபு, கல்லூரியின் வளாக மேலாளர் உம்மர் ஆகியோர் முன்னிலை வகித்தனர் முதல் நாள் விழாவில் சமூக ஊடகவியலாளர் நூர்ஜலீலா கலந்து கொண்டு பேசினார் அதனைத் தொடர்ந்து இல்லம் இசைக்குழுவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் திமுகஎம்.பி திருச்சி சிவா கலந்து கொண்டு பேசினார். விழாவில் பாடத்திட்டம் இணை பாடத்திட்டம் மற்றும் கூடுதல் பாடத்திட்ட செயல்பாடுகள், தன்னார்வத் தொண்டு மற்றம் விளையாட்டுகளில் சாதனைப்படைத்த மாணவ, மாணவியர்களுக்கு கவுரவிக்கப்பட்டனர் விழாவிற்கான ஏற்பாடுகளை உதவி பேராசிரியர்கள் பிரவீன், நிமிதா மற்றும் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் கல்லூரியின் ,ஊழியர்கள், மாணவர்கள் செய்திருந்தனர்.

# மாரியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம்!

## நா.கார்த்திக் வழங்கினார்!!

கோவை,ஏப்.11

கோடை மாநகர் மாவட்டம் 66வது வார்டு இளைஞரணி சார்பில் புலியகுளம் மாரியம்மன் கோயில் திடலில் புலியகுளம் மாரியம்மன் திருக்கோவில் திருவிழாவை முன்னிட்டு பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

அதன் ஒரு பகுதியாக பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் கலந்து கொண்டு திருவிழாவிற்கு வருகை புரிந்த பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வட்டக கழக செயலாளர் நவீன், பாலமுருகன், கவுன்சிலர்கள் முனியம்மாள் பாலமுருகன், அவைத் தலைவர் ஆர்.சந்திரன், ஆர்.சந்திரன், குழந்தைசாமி, பகுதி இளைஞரணி அமைப்பாளர்கவுசி க்குமார், இளைஞரணி செயலாளர் செ. வைஷ்ணவ், துணைச் செயலாளர் அரின், மற்றும்நிர்வாகிகள் பிரணவ், தர்ஷன், சிசின்,, பாலகார்த்திக், மற்றும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள்.வார்டு பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# காமாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா!

கோவை,ஏப்.11–

கோவை, சலிவன் வீதியில் அமைந்துள்ள தேவி ஸ்ரீ காமாட்சி அம்மன் கோவிலில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா இன்று நடைபெற்றது. விழாவில் ஸ்ரீ அய்யனார் ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹரஸ்ரீ ஸ்ரீனிவாச சுவாமிகள் , கோவை ஆதீனம் ஸ்ரீ பாலமுருகனடிமை சுவாமிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக



தலைவர் எஸ்.பரமசிவம் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.



கோவை மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் சமத்துவ நாள் உறுதிமொழியானது மாநகராட்சி துணை ஆணையாளர் சுல்தானா தலைமையில் அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் உதவி ஆணையர் மோகன சுந்தரி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

# காமாட்சியம்மன் கோயிலில் பங்குனி மாத பொங்கல் விழா!

## நாளை நடக்கிறது!!

கோவை,ஏப்.11

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்அகுளி தாலிகட்டி பாளையத்தில் அமைந்துள்ள காமாட்சியம்மன் திருக்கோயி லில் பொங்கல் விழா பங்குனிமாத திருவிழா நிகழ்ச்சி கடந்த 9 ந் தேதி தொடங்கியது.

தொடர்ந்து பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளுடன் தொடங்கிய பங்குனி மாத பொங்கல்விழா நாளை அதிகாலை 5மணிக்குகணபதி ஹோமம்,அபிஷேகம் நடைபெறுகிறது, 7 மணிக்கு கும்பம் ஸ்ரீ காமாட்சி கரகத்துடன் கோயிலலை சுற்றி வருதல்,

காலை 9 மணிக்கு ஊத்துக்குளி கைலாசநாதர் கோயிலில் இருந்துமகளிர் அணி மற்றும் இளைஞர் அணியினர் பால்குடம், தீர்த்தக்கு டம் எடுத்து வருதல் மதியம் 12 மணிக்கு பொங்கல் மஹா சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் இடம் பெறம்,

அதைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு அபிஷேக ஆராதவையுடன் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர், ஸ்ரீ காமாட்சி அம்மனுக்கு திருக்கல்யாணம், உற்சவம் திருக்கோயிலில் நடைபெறுகிறது.

மாலை 4 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் கட்டளைதாரர் கே. மோகனசுந்தரம் எம்.சித்ரா. கே.வாசுதேவன்வி.கீதா ஏ.கே.சி தியாகராஜன் கீதாராணி மற்றும் தாலிகட்டிபாளையம் மகளிர் அணியினர்.

இரவு திருக்கல்யாண அறுசுவைவிருந்து நடைபெறுகிறது, இரவு8 மணிக்கு அங்கரித்த திருத்தேரில் உற்சவமூர்த்திகள் திருவீதிஉலா புறப்பட்டு படை க் படைக்கலக்காரர் வீட்டை அடைதல் நிகழ்ச்சி. இரவு 8மணிக்கு திருத்தேர் மலர் அலங்காரம், இரவு 10மணிக்கு சலங்கை ஆட்டம்,கும்மி ஆட்டம் நடைபெறுகிறது, இதற்கான ஏற்பாடுகளைஸ்ரீகாமாட்சியம்மன் கோயில் கமிட்டியினர், ஸ்ரீ காமாட்சி அம்மன் அறக்கட்டளையினர் செய்து வருகிறார்கள்.

# சேலம் அம்மாபேட்டை கல்லூரியில் சாதனையாளர்கள் தினம்!

சேலம் ஏப். 11–

சேலம் அம்மாபேட்டையில் உள்ள தனியார் கல்லூரியில் சாதனையாளர்கள் தினம் கொண்டாடப்பட்டது. கல்லூரி சேர்மன் கைலாசம் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சார்லஸ் காட்வின் கலந்து கொண்டு மாணவ, மாணவியர் இடையே கருத்துரையாடல் வேலை வாய்ப்பு, பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், 100 சதவீத வருகை பதிவு உள்ளிட்டவைகளில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் ராஜ விநாயகம், தாளாளர் செந்தில்குமார், முதல்வர் சுந்தரராஜன், துணை முதல்வர்கள் விஸ்வநாதன், ஜோஸ்வா உட்பட மாணவ மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

Published by S.N.Selvam on behalf of M/s. Chennai Murasu Pvt.Ltd. from Kovai Malai Murasu Achagam, No.292, old No.1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore-641 006. Tamil Nadu and printed by N.Durai Prakash at Kovai Malai Murasu Achagam, No.292, old No.1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore-641006, Tamil Nadu. Editor:S.N.Selvam. RNI Regn. No. TNTAM/2016/75063

### "கூட்டி கழிச்சு பாரு.. கணக்கு சரியா வரும்"

# ரஜினி பட வசனத்துடன் அ.தி.மு.க. சார்பில் சுவரொட்டிகள்!

## கோவையில் பரபரப்பு!!

கோவை,ஏப்.11

கோவை பகுதியில் அதிமுகவினர் ஒட்டி உள்ள சுவரொட்டிகளால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா, எடப்பாடி பழனிச்சாமி, எஸ் பி வேலுமணி, அம்மன் அர்ஜூனன், ஜெயராமன் ஆகியோர் படங்கள் கொண்ட போஸ்டர்களுடன். 2026 இல் அண்ணன எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் மீண்டும் அதிமுக ஆட்சி... "கூட்டி கழிச்சு பாரு கணக்கு சரியா வரும்.. "என்ற வாசகத்துடன் அந்த சுவரொட்டிகள் காணப்பட்டன. இந்த போஸ்டர்கள் தற்போதைய அரசியல் சூழலில் கோவை அ.தி.மு.க.வினர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது .

கட்சியினருக்கு உற்சாகத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளதாக அ.தி.மு.க.வினர் கூறினர்.



கோவை காந்தி பார்க் பாலதண்டாயுதபாணி முருகன் கோவிலில் பங்குனி உத்திரத் திருவிழாவை முன்னிட்டுவருகைபுரிந்த பக்தர்களுக்குஎல்லாம்முருகன்திருவுருவபடத்தை கோயில் அறங்காவலர் குழுத்தலைவர்பரமசிவம்வழங்கினார்.உடன்அறங்காவலர்குழுஉறுப்பினர்கள்மற்றும்திருக்கோவில் அதிகாரிகள் இருந்தனர். ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# விஷம் குடித்து வாலிபர் தற்கொலை!

கோவை,ஏப்.11–

கோவை, சூலூர் மாரியம்மன் கோவில் பகுதியைச் சேர்ந்தவர் சுரேஷ்குமார்(38). இவரது மனைவி பிரியா (35). சுரேஷ்குமார் வீட்டின் அருகே உள்ள காலி இடத்தில் விஷம் குடித்த நிலையில் மயங்கி கிடந்தார்ர.

இது குறித்து அறிந்ததும் அவரது மனைவி சுரேஷ்குமார் மீட்டு 108 ஆம்புலன்ஸ்சுக்கு தகவல் கொடுத்தார். உடனே அவர்கள் விரைந்து வந்தனர். அப்போது அவரை பரிசோதித்த ஊழியர்கள் சுரேஷ்குமார் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர்.

இது குறித்து பிரியா சூலூர் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்தார். போலீசார் சுரேஷ்குமார் உடலை கைப்பற்றி விசாரணை நடத்தினர். அப்போது சுரேஷ்குமார்உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் பணம் கடன் வாங்கி இருந்ததாகவும் அதை அவரால் திருப்பிக் கொடுக்க முடியாததால் மனம் உடைந்து விஷம் கடித்துதற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# போதை மாத்திரைகளுடன் வாலிபர் பிடிபட்டார்!

கோவை,ஏப்.11–

கோவை, உக்கடம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கஜேந்திரன் மற்றும் போலீசார் உக்கடம் பகுதியில் போதை பொருள் மற்றும் கஞ்சா விற்கப்படுவதை தடுப்பதற்காக தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர். சுங்கம் பைபாஸ் ரோடு பகுதியில் உள்ள மின்வாரிய அலுவலகம் அருகில் போலீசார் வந்து சென்றபோது சந்தேகப்படும் படியாக நின்ற வாலிபரை பிடித்து சோதனை செய்தனர். அப்போது அவரிடம் தடை செய்யப்பட்ட 15 போதை மாத்திரைகள் மற்றும் கத்திஇருந்ததைபார்த்துபோலீசார்அதிர்ச்சியடைந்தனர். போலீஸ் விசாரணையில் அவரது பெயர் சுகுணாபுரம் பகுதியைச் சேர்ந்த சபீயூ தின்( 24) என தெரியவந்தது. அவரிடம் இருந்து செல்போனையும் போலீசார் கைப்பற்றினர். பிறகு அவரை கோர்ட்டில் ஆஜர் படுத்தி போலீசார் சிறையில் அடைத்தனர்.

## மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து

# தமிழக காங்கிரசார் "கருப்பு புறா" பறக்க விட்டு ஆர்ப்பாட்டம்!

## செல்வப்பெருந்தகை தலைமையில் 250 காங்கிரசார் கைது!!

சென்னை,ஏப்.11–

சென்னை வந்துள்ள மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து தமிழக காங்கிரஸ் கட்சியினர் செல்வப்பெருந்தகை தலைமையில் மயிலாப்பூரில் "கருப்பு புறாவை" பறக்க விட்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்ட 250–க்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இரண்டு நாள் சுற்றுப்பயணமாக தமிழகம் வந்துள்ளார். அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் கூட்டணியை இறுதி செய்வதற்காக அவர் வருகை புரிந்துள்ளார்.

இந்த நிலையில் தமிழகத்துக்கு நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டுவதாக குற்றம் சாட்டியும், பாராளுமன்றத்தில் அம்பேத்கர் பற்றி அவதூறாக பேசி இருப்பதாக கண்டனம் தெரிவித்தும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பில் அக்கட்சியின் தலைவர் கு.செல்வப்பெருந்தகை தலைமையில், மயிலாப்பூரில் டாக்டர் அம்பேத்கர் பாலம் அருகில் (சிட்டி சென்டர் அருகில்) கருப்புக் கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் இன்று நடைபெற்றது.

அப்போது, உள்துறை அமைச்சர் அமித்ஷாவே திரும்பிப் போ என்றும் மத்திய அரசை கண்டித்தும் காங்கிரஸ் கட்சியினர் கருப்புக் கொடி ஏந்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்.

மேலும், மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து, காங்கிரஸ் கட்சியினர் கருப்பு புறா, கருப்பு பலுன் பறக்க விட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். குறிப்பாக, அமித்ஷா படத்தை தீயிட்டு கொளுத்தி எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில், செல்வப்பெருந்தகை பேசுகையில்,"தமிழ்நாட்டு உரிமை மறுக்கப்படுகிறது. மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா நாடாளுமன்றத்தில் அம்பேத்கரை இழிவாக பேசி வருகிறார்.

தமிழகத்திற்கான நிதியை நிறுத்தி வைத்துள்ளனர். அதற்கு தான் பிரதமரும், அமித்ஷாவும் தமிழகம் வரும் போது நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறோம்.

தமிழகம் நலன் எதிர்காலத்தில் தி.மு.க.வும், காங்கிரஸ் இணைந்து பணியாற்றி வருகின்றனர். அமித்ஷா மாதவ பெருமாள் கோயிலுக்கு சென்று வழிபடும் போது கோயிலில் உள்ள கடவுளே, அமித்ஷாவிற்கு அறிவுரை வழங்க உள்ளார். அந்த அறிவுரைகளை பிரதமரிடம் சென்று கூறி தமிழகத்திற்கான நிதியை கொடுக்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்ட 250–க்கும் மேற்பட்ட காங்கிரஸ் கட்சியினரை போலீசார் கைது செய்து பேருந்தில் ஏற்றி சமுதாய நலக்கூடத்தில் அடைத்தனர்.

இதில், கிராம கமிட்டி சீரமைப்பு குழு தலைவர் பீட்டர்அல்போன்ஸ், எம்.எல்.ஏ.க்கள் அசன் மவுலானா, துரை சந்திரசேகர், துணைத் தலைவர்கள் சொர்ணா சேதுராமன், கோபண்ணா, கே.விஜயன், பொதுச்செயலாளர்கள் டி.செல்வம், தளபதி பாஸ்கர், அமைப்பு செயலாளர் ராம் மோகன், இலக்கிய அணி தலைவர் பி.எஸ்.புத்தன், மாவட்ட தலைவர்கள் வழக்கறிஞர் எம்.ஏ.முத்தழகன், ஜெ.டில்லி பாபு மற்றும் எஸ்.எம்.குமார், அரும்பாக்கம் வீரபாண்டியன், தாம்பரம் நாராயணன், மன்சூர் அலிகான், திருவான்மியூர் மனோகரன், திருநாவுக்கரசர், ஆவின் ஆனந்த், நாகராஜன், ஹாரின்விவேக், ஓ.பி.சி.விஜயகுமார், தென்காசி முஸ்தபா, நுங்கம்பாக்கம் சீனிவாசன், மணிகண்டன் ராஜ், முத்தமிழ், வில்லிவாக்கம் ஜான்சன் உள்ளிட்ட பலர்கலந்துகொண்டனர்.



சென்னை வந்துள்ள மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் சென்னை மயிலாப்பூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அருகில், காங்கிரஸ் மாநில நிர்வாகிகள் பீட்டர் அல்போன்ஸ், அசன் மௌலானா எம்.எல்.ஏ., சொர்ணா சேதுராமன், டி.செல்வம், கே.விஜயன், எம்.ஏ.முத்தழகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் பழைய பஸ் நிலையம் எதிரே இன்று காலை 12 மணி அளவில் பங்குனி உத்திர திருவிழா முன்னிட்டு பாரத சம உடமை கட்சியின் தலைவர் ஏபிஎஸ் பழனி ராமச்சந்திரன் தலைமையில் 5000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் பொது செயலாளர் ஆறுமுகம்,மகளிர் அணி தலைவர் பிரபா,கல்பனா வெங்கடேஷ்,வக்கில் சந்திரசேகர், செல்லமுத்து மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மும்பை தாக்குதல் குற்றவாளி

# தஹாவூர் ராணாவிடம் என்.ஐ.ஏ. விசாரணையை தொடங்கியது!

## 18 நாள் காவலில் தீவிர பாதுகாப்பு!!

புது டெல்லி, ஏப். 11–

கடந்த 2008–ஆம் ஆண்டு, நவம்பரில் மராட்டிய மாநிலம் மும்பையில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் 166 பேர் உயிரிழந்தனர். மேலும் 238 பேர் படுகாயமடைந்தனர். கடல் வழியாக மும்பைக்குள் நுழைந்த பயங்கரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தினர். இந்த தாக்குதலில் ஈடுபட்ட 9 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில், அஜ்மல் கசாப் என்ற ஒரு பயங்கரவாதி கைது செய்யப்பட்டு பின்னர் தூக்கிலிடப்பட்டான். நாட்டு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த சம்பவத்தில் பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்தவரும் அமெரிக்க குடியுரிமை பெற்றவருமான டேவிட் ஹெட்லி என்கிற தாவூத் கிலானி மற்றும் பாகிஸ்தானில் பிறந்த கனடா குடியுரிமை பெற்ற தொழிலதிபர் தஹாவூர் ராணா (வயது 64) ஆகிய இருவரும் மூளையாக செயல்பட்டது தெரிய வந்தது.

ராணாவுக்கு லஷ்கர்–ஏ–தொய்பா மற்றும் ஹர்கத்அல்ஜிஹாதி இஸ்லாமி உள்பட பாகிஸ்தானைச் சேர்ந்த பல்வேறு பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புள்ளது. ராணாவின் குடியேற்ற ஆலோசனை சேவைகள் நிறுவனத்தின் மூலம்தான், மும்பை தாக்குதல் சம்பவத்துக்கு பயங்கரவாதிகள் சதித் திட்டம் தீட்டினர். லஷ்கர் தீவிரவாதிகளுக்கு ஓட்டல் வரைபடம் குறித்த மொத்த தகவல்களையும் கொடுத்தது ராணா தான் என்று கூறப்படுகிறது. கடந்த 2009–ஆம் ஆண்டு அமெரிக்காவில் தஹாவூர் ராணா கைதான நிலையில், 2013–ஆம் ஆண்டில் அவருக்கு அமெரிக்க நீதிமன்றம் 13 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது.

இந்நிலையில் மும்பை தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த தஹாவூர் ராணாவை இந்தியாவுக்கு நாடு நடத்த மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது.

அதன்படி நேற்று மாலை 6.30 மணியளவில் தனி விமானம் மூலம் தஹாவூர் ராணா டெல்லி பாலம் விமானத்திற்கு அழைத்து வரப்பட்டார். விமான நிலையத்தில் ராணா தரையிறங்கியதும், தேசிய புலனாய்வு முகமை அவரை அதிகாரப்பூர்வமாக கைது செய்து டெல்லி பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது.

என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி சந்தர்ஜீத் சிங் முன்பாக நேற்றிரவு ராணா ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவரை 20 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க என்.ஐ.ஏ. அனுமதி கோரியது. இதையடுத்து ராணாவை 18 நாள் காவலில் எடுத்து விசாரிக்க சிறப்பு நீதிபதி அனுமதி அளித்தார். மும்பை பயங்கரவாத சம்பவம் நடைபெற்று 17 ஆண்டுகளுக்கு பிறகு ராணா நாடு கடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதன்படி தஹாவூர் ராணாவிடம் இன்று என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

# அமைச்சர் பொன்முடியின்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

கிடைத்ததால் மீண்டும் அமைச்சராக்கப்பட்டார். தற்போது அவர் வனத்துறை அமைச்சராக செயல்பட்டு வருகிறார். இந்தநிலையில், மீண்டும் அவரது பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியது.

தந்தை பெரியார் திராவிடக்கழகம் சார்பில், திருவாரூர் கே. தங்கராசுவின் நூற்றாண்டு விழா சென்னையில் கடந்த 6–ஆம் தேதி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் பொன்முடி கலந்துக் கொண்டு பேசினார்.

அப்போது, அவர் கூறிய சில வார்த்தைகள் பெண்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் இருந்ததாக கூறப்படுகிறது. குறிப்பாக, சைவ மற்றும் வைணவ சமய நம்பிக்கைகளை அவர் அவமதிக்கும் வகையில் பேசியுள்ளார்.

அவரது இந்த பேச்சுக்கு சமூக வலைதளங்களில் கடும்எதிர்ப்புகிளம்பியது. அரசியல் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கனிமொழி எம்.பி.யும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ளபதிவில்,"அமைச்சர் பொன்முடியின் சமீபத்திய பேச்சு ஏற்றுக்கொள்ள முடியாதது. எந்த காரணத்திற்காக பேசப்பட்டிருந்தாலும் இப்படிப்பட்ட கொச்சையான பேச்சுகள் கண்டிக்கத்தக்கது" என்று குறிப்பிட்டிருந்தார்.

இதுபோன்ற சூழலில் அமைச்சர் பொன்முடியிடமிருந்து தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் பதவி பறிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை முதலமைச்சரும் கட்சியின் தலைவருமான மு.க. ஸ்டாலின் எடுத்துள்ளார்.

மேலும், அந்த பதவி திருச்சி சிவா எம்.பி.யிடம் வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கழகசட்டதிட்ட விதி: 17–பிரிவு :3–ன் படி கழக கொள்கைப் பரப்புச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் திருச்சி சிவா, எம்.பி., அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளராகநியமிக்கப்படுகிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக வெற்றிக்கழக...

1–ம் பக்கத் தொடர்ச்சி

மாநாடுகள் நடத்தப்படும் என கட்சியின் முதலாம் ஆண்டு தொடக்க விழாவில் விஜய் அறிவித்திருந்தார். அந்த மாநாடு மிகப்பிரமாண்ட வகையில் நடத்தப்படும் என்றும் கூறினார்.

அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது. கட்சியின் முதலாவது மாநாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் நடைபெற்றது. பொதுக்குழுக் கூட்டம் மாமல்லபுரத்தில் நடைபெற்றது. ஆகவே பூத் கமிட்டி மாநாட்டை மண்டலவாரியாகநடத்தவிஜய் முடிவு செய்துள்ளார். அந்த வகையில் முதலாவது மாநாட்டை கோயம்புத்தூரில் நடத்த முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக கோவையில் ஆதவ் அர்ஜூனா உள்ளிட்ட நிர்வாகிகள் சந்தித்துப் பேசியதாக தெரிகிறது.

இது போன்ற சூழ்நிலையில் தான் மாவட்ட செயலாளர்களுடன் ஆலோசனை நடத்த விஜய் தீர்மானித்தார். அதன்படி இன்று பனையூரில் உள்ள அலுவலகத்தில் மாவட்ட செயலாளர்களுடன் அவர் ஆலோசனை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. இந்த ஆலோசனையின் போது பூத் கமிட்டி மாநாட்டை பெரிய அளவில் நடத்துவது குறித்தும், சட்டசபைத் தேர்தலில் கூட்டணி வியூகம் அமைப்பது குறித்தும் ஆலோசித்ததாக தெரிகிறது.

ஏற்கனவே த.வெ.க. தலைமையில் தான் கூட்டணி அமைக்கப்படும் என அவர் கூறி வருகிறார் என்பதுகுறிப்பிடத்தக்கது.



செந்தில் உடல் மறுபிரேத பரிசோதனை நடந்த தர்மபுரி அரசு ஆஸ்பத்திரி வளாகத்தில் செந்திலின் உறவினர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசாரையும் படத்தில் காணலாம்

# சென்னை நட்சத்திர ஓட்டலில்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

கூறப்படுகிறது. இது பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணிக்கு அண்ணாமலை தொடர்ந்து தலைவராக நீடிப்பது நெருடலாக இருக்கும் என்று கருதப்படுகிறது. எனவே அண்ணாமலைக்கு பதவி நீட்டிப்பு அளிக்கப்படமாட்டாது என்பது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

பா.ஜ.க. மேலிடம் விடுத்த அவசர அழைப்பை ஏற்று, நயினார் நாகேந்திரன் அண்மையில் டெல்லிக்குச் சென்றார். டெல்லியில் அவர் பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜெ.பி.நட்டா, மத்திய உள்துறை மந்திரியும், பா.ஜ.க. மூத்த தலைவருமான அமித்ஷா உள்ளிட்டோரை சந்தித்துப் பேசினார்.

இந்நிலையில் மத்திய உள்துறை அமைச்சரும் பா.ஜ.க. மூத்த தலைவருமான அமித்ஷா நேற்று இரவு சென்னை வந்தார். கிண்டியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் அவர் தங்கியுள்ளார். பா.ஜ.க. மூத்த நிர்வாகிகளுடன் அவர் இன்று ஆலோசனை நடத்தினார். அமித்ஷாவை சில முக்கிய பிரமுகர்கள் சந்தித்து அரசியல் நிலவரம் குறித்து விவாதித்தனர்.

இன்று, விருகம்பாக்கத்தில் உள்ள டாக்டர் தமிழிசையின் வீட்டுக்கு அமித்ஷா சென்றார். தந்தை குமரி அனந்தன் மறைவால் சோகத்தில் மூழ்கியுள்ள டாக்டர் தமிழிசையை அமித்ஷா சந்தித்து ஆறுதல் கூறினார்.

அமித்ஷா மயிலாப்பூரில் உள்ள பிரபல பத்திரிகையாளரும் ஆடிட்டருமான ஜி. குருமூர்த்தியின் இல்லத்துக்கு சென்று அவருடன் முக்கிய ஆலோசனை நடத்தினார். செய்தியாளர்களுக்கு அமித்ஷா பேட்டியளித்தார். இது தேசிய அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. இதை அடுத்து சென்னை பயணத்தை முடித்துக்கொண்டு அமித்ஷா டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

பா.ஜ.க. வரலாற்றில் தேசியத் தலைவர் பதவிக்கோ, மாநில தலைவர் பதவிக்கோ ஒருபோதும் போட்டிஏற்பட்டதுகிடையாது. கருத்தொற்றுமை அடிப்படையில் போட்டியின்றி தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் நடைமுறையாக உள்ளது.

இப்போதைய நிலவரப்படி பா.ஜ.க. மாநிலத் தலைவருக்கான பரிசீலனைப் பட்டியலில் நயினார்நாகேந்திரன், பொன். ராதாகிருஷ்ணன், டாக்டர் தமிழிசை, வானதி சீனிவாசன், முருகானந்தம், ராமசீனிவாசன், ஆனந்தன் அய்யாசாமி, எஸ்.ஆர்.சேகர் உள்ளிட்டோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளதாக செய்தி கசிந்துள்ளது.

மாநிலத் தலைவர் தேர்வுக்கான நடவடிக்கை வேகமெடுத்துள்ளது. மாநில பா.ஜ.க. தலைவர் மற்றும் தேசிய பொதுக்குழு உறுப்பினர் பதவிகளுக்கு போட்டியிட விரும்புவோர் இன்று பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரைவிருப்ப மனுக்களை தாக்கல் செய்யலாம் என மாநில தேர்தல் அதிகாரி எம். சக்கரவர்த்தி அறிவித்திருந்தார்.

மாநிலத் தலைவராக மனுதாக்கல் செய்பவர் 3 பருவ தீவிர உறுப்பினராகவும், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அடிப்படை உறுப்பினராகவும் இருக்க வேண்டும் என்பது விதிமுறையாகும்.

தலைவர் தேர்தலுக்கு மனுதாக்கல் செய்ய விரும்புபவருக்கு ஆதரவாக குறைந்தபட்சம் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் 10 பேர் எழுத்துப்பூர்வமாக பரிந்துரை அளிக்க வேண்டும்.

தேசிய பொதுக்குழு உறுப்பினர் பதவிக்கு போட்டியிட விரும்புபவர் மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் ஒருவர் முன்மொழிய வேண்டும். மற்றொரு மாநில பொதுக்குழு உறுப்பினர்வழிமொழிய வேண்டும்.

10 ஆண்டுகள் அடிப்படை உறுப்பினராக இருக்க வேண்டும் என்பது தேவைக்கேற்பதளர்த்தப்படும் என்பதை தேர்தல் அதிகாரி சக்கரவர்த்தி தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்நிலையில், பா.ஜ.க. மையக்குழு கூட்டம், கமலாலயத்தில் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது.

மேலிடப் பிரதிநிதியாக சென்னைக்கு வந்துள்ள மத்திய மந்திரி கிஷன் ரெட்டி பா.ஜ.க. மூத்த நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு மண்டபத்தில் பா.ஜ.க. கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில், இறுதி முடிவு எடுக்கப்படும் என்று நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

பா.ஜ.க. மாநில தலைவர் யார் என்பது இன்று தெளிவுபடுத்தப்பட்டுவிடும். இதுபற்றிய அதிகாரப்பூர்வஅறிவிப்புஇன்றே வெளியிடப்படும் என்று கடைசியாக கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது.

## முரசம்

11-4-2025

# அமெரிக்க வர்த்தகப் போர்: உயரும் தங்கம் விலை!

கடந்த புதன்கிழமை (ஏப்ரல் 2) அன்று பல நாடுகள் மீது பரஸ்பர வரியை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்தார். இது உலக பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில், சீனா தவிர மற்ற நாடுகளுக்கான பரஸ்பர வரியை 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக டிரம்ப் அறிவித்திருக்கிறார். தொடர்ந்து 4 நாட்களுக்கு தங்கத்தின் விலை குறைந்தது. நேற்று முன்தினம் (ஏப்ரல் 9) ஒரு கிராமுக்கு (22 கேரட்) 65 ரூபாய் உயர்ந்து சுமார் 8,290 ரூபாய்க்கு தங்கம் விற்பனை செய்யப்பட்டது. நேற்று மேலும் உயர்ந்து ஒரு கிராம் 8,560 ரூபாய்க்கு விற்பனையானது.

பொதுவாக, பொருளாதார நெருக்கடி அல்லது சந்தை குழப்பத்தின்போது, முதலீட்டாளர்கள் தங்கத்தை பாதுகாப்பான முதலீடாக கருதி அதன் மீது முதலீடு செய்வதால், தங்கத்தின் விலை உயரும். ஆனால் இந்த முறை மாறாக டிரம்ப் வரி விதிப்புக்கு பிறகு, தங்கத்தின் விலை சரிந்தது தற்போது உயர்ந்துள்ளது. இந்தியாவில் தங்கத்தின் விலையானது அவ்வப்போது ஏற்ற இறக்கங்களை சந்தித்தாலும், எப்போதும் விலை உயர்ந்து கொண்டேதான் இருந்துள்ளது.

கொரோனா நோய் தொற்று காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை காரணமாக ஒரு சவரன் தங்கத்தின் விலை சுமார் 38 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. இதன் பிறகு ரஷ்யா – உக்ரேன் போர் போன்ற பல காரணங்களினால், தங்கத்தின் விலை உச்சத்தை எட்டி, தற்போது ஒரு சவரன் சுமார் 67,000 முதல் 69,000 ரூபாய் வரை விற்பனையாகிறது. சென்னை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜோதி சிவஞானம், "டிரம்பின் வர்த்தக வரி விதிப்பின் காரணமாக உலக பொருளாதாரமே குழப்பத்தில் இருக்கிறது. அதனால்தான் தங்கம் விலை இறங்கி தற்போது ஏறியுள்ளது", என்று கூறினார்.

"தங்கம் ஒரு நிலையான முதலீடு, இதனால் அதற்கு மக்கள் மத்தியில் அதிக தேவை இருக்கிறது. அதனால் தற்போது பங்குச்சந்தை வீழ்ச்சியை சந்தித்தாலும், தங்கத்தின் விலையானது மீண்டும் உயர்வை எட்டியுள்ளது. இந்த வீழ்ச்சி ஒரு குறுகிய கால தாக்கம் மட்டுமே", என்றும் அவர் குறிப்பிடுகிறார். ஆனால் டிரம்பின் வரி விதிப்பு காரணமாக அடுத்த சில ஆண்டுகளில் தங்கத்தின் விலை 38 சதவீதம் வீழ்ச்சியை சந்திக்கும் என்று அமெரிக்காவை தளமாக கொண்டு இயங்கும் மார்னிங்ஸ்டார் என்னும் நிதி நிறுவனத்தை சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் கணித்துள்ளார்.இது நடக்க வாய்ப்பில்லை என்று ஜோதி சிவஞானம் தெரிவிக்கின்றார். வெறும் அமெரிக்காவின் வரி விதிப்பினால் மட்டும் தங்கத்தின் விலையில் மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை'' என்றும் அவர் கூறுகிறார்.

சமீபகாலமாக தங்கத்தின் விலையேற்றத்தில் மிக முக்கியமான காரணிகளில் ஒன்று, அந்தந்த நாடுகளின் மத்திய வங்கிகளின் முன்னெப்போதும் இல்லாத அளவிலான தங்கத்தை கொள்முதல் செய்வது ஆகும். தங்கம் ஒரு நிலையான மற்றும் அனைத்து நாடுகளுக்கும் பொதுவான ஒரு முதலீடு என்பதாலும், அது வர்த்தக பரிவர்த்தனை செய்ய ஏதுவாக இருக்கும் என்பதாலும் உலக நாடுகளின் மத்திய வங்கிகள் தங்கத்தை அதிகம் சார்ந்துள்ளன", என்று பேராசிரியர் ஜோதி சிவஞானம் தெரிவிக்கிறார்.

உலக தங்க கவுன்சில் வெளியிட்ட தகவலின்படி, உலகளவில் சுமார் 20 சதவீதம் தங்கத்தை மத்திய வங்கிகள் வாங்குகின்றன. தங்கத்தை வாங்கும் துறைகளில், மூன்றாம் இடத்தில் மத்திய வங்கிகள் உள்ளன. அதிக அளவிலான தேவை காரணமாக தங்கத்தின் விலை அதிகரிக்குமே தவிர குறைய வாய்ப்புகள் இல்லை என்று குறிப்பிடுகிறார் பேராசிரியர் ஜோதி சிவஞானம். எப்போதும் ஏறிக்கொண்டே இருக்கும் அதன் விலை மற்றும் நிலைத்தன்மை காரணமாக இந்தியாவைப் போல மற்ற நாடுகளிலும் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளைத் தாண்டி பொது மக்களும் தங்கத்தில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். இதுவும் தங்கத்தின் விலை உயர்வதற்கான காரணியாக இருக்கின்றது", என்று அவர் கூறுகிறார்.

மேலும் பணவீக்கம், பொருளாதார நிச்சயமற்ற தன்மை, புவிசார் அரசியல் பதற்றங்கள் போன்றவையும் சேர்ந்து தங்கத்தின் விலையை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. "இது போன்ற காரணிகளில் பாரிய மாற்றம் நிகழ்ந்து, தங்கத்திற்கான தேவை குறைந்தால் மட்டுமே அதன் விலையிலும் குறிப்பிடத்தக்க அளவில் சரிவு ஏற்படும். மற்றபடி, தங்கத்தின் விலையில் அவ்வப்போது சரிவு இருந்தாலும், அதன் மதிப்பு மேல் நோக்கி உயர்ந்துகொண்டேதான் இருக்கும். அமெரிக்கா தொடங்கியுள்ள வர்த்தக போரால் தங்கம் ஒரு சிறந்த பாதுகாப்பு முதலீடாக கருதப்படுகிறது. இது தங்கத்தின் விலையை நிச்சயமாக அதிகரிக்கவே செய்யும்", என்கிறார் ஜோதி சிவஞானம்.

# உ.பி., பீகார், ஜார்க்கண்டில் மின்னல் தாக்கி 47 பேர் சாவு!

## தலா ரூ.4 லட்சம் உதவி!!

பாட்னா, ஏப்.11–

உ.பி., பீகார், ஜார்க்கண்ட் மாநிலங்களில் மின்னல் தாக்கியதில் 47 பேர் பலியாகி விட்டார்கள்.

இந்தியாவில் தற்போது கோடை வெயில் சுட்டெரிக்கிறது. அதே நேரத்தில் சில இடங்களில் இடி – மின்னலுடன் கோடை மழையும் பெய்து வருகிறது. இதனால் மக்களுக்கு லேசான மகிழ்ச்சியும் கிடைக்கிறது. அதே நேரத்தில் அசம்பாவிதங்களும் நடக்கின்றன.

கோடை மழை என்றாலே அங்கு இடியும், மின்னலும் பலமாக இருக்கும். அத்துடன் பலத்த சூறைக்காற்றும் வீசும். இதனால் உயிரிழப்புகளும் நேரும்.

அந்த வகையில் உ.பி., பீகார், ஜார்க்கண்ட் உள்ளிட்ட வட மாநிலங்களில் நேற்று பல இடங்களில் இடி – மின்னலுடன் கோடை மழை பெய்தது. அப்போது அதிக உயிரிழப்புகள் நேர்ந்துள்ளன.

பீகார் மாநிலத்தில் 25 பேர் இறந்துள்ளனர். அதில் நாலந்தா மாவட்டத்தில் மட்டும் 18 பேர் பலியாகி உள்ளார்கள்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். இங்கு பல மாவட்டங்களில் அழிவுகளும் ஏற்பட்டுள்ளன.

இந்த 2 மாநில அரசுகளும், அதனதன் மாநிலங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சத்தை நிவாரண உதவியாக அறிவித்துள்ளன.

மேலும் ஜார்க்கண்ட் மாநிலத்தில் 4 பேர் இறந்துள்ளார்கள். அங்கும் சூறைக்காற்றுக்கு ஏராளமான பயிர்கள் அழிந்துள்ளன.

வெள்ளிதோறும் மாலைமுரசில் ராசிபலன் வெளிவரும்

# ராசி பலன்

## 13.04.2025 முதல் 19.04.2025 வரை (பங்குனி 30 முதல் சித்திரை 06 வரை

பரம்பரை ஜோதிடர் பெருங்குளம் ராமகிருஷ்ணன் 7845119542



| | | | |
|---|---|---|---|
| சூர் புத சுக் (வ) ராகு | | குரு | |
| சனி | (13.04.2025) கிரக நிலை | | செவ் |
| | | | |
| | | சந் | கேது |

### மேஷம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்)

இந்த வாரம் ராசிநாதன் செவ்வாயின் சஞ்சாரத்தால் எந்த ஒரு விஷயத்திலும் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள். குடும்பத்தில் இருப்பவர்களிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் பேசி செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இருந்த இழுபறியானநிலைமாறும். உத்தியோகத்தில்இருப்பவர்கள் அலுவலகத்தில் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பார்கள். அலுவலக வேலையாக வெளியூர் செல்ல நேரலாம். பெண்களுக்கு அடுத்தவர் பேசுவதை காதில் வாங்காமல் தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு பயணங்களில் சாதகமான பலன் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியை பற்றிய பயம் நீங்கும்.

பரிகாரம்: தினமும் முருகனை வணங்குவது நன்மைகளை நல்கும்.

### துலாம்

(சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்):

இந்த வாரம் புத்திக் கூர்மையுடன் செயல்களைசெய்து எதிலும் வெற்றி பெறுவீர்கள். வசதிகள் அதிகரிக்கும். குடும்பத்தில் வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கை துணையுடன் அனுசரித்து செய்வது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. விருந்தினர்கள் வந்து செல்வார்கள். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். பெண்களுக்கு மனதடுமாற்றம் இல்லாமல் எதையும் செய்வது நல்லது. கலைத்துறையினருக்கு நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த பிரச்சினைகள் குறையும். மாணவர்களுக்கு சக மாணவர்கள், நண்பர்களிடம் அதிகம் பேசி பழகுவதை தவிர்ப்பது நல்லது. பாடங்களில் கூடுதல் கவனத்துடன் படிப்பது நன்மை தரும்.

பரிகாரம்: கஜலக்ஷ்மியை வணங்கினால் கஷ்டம் தீரும்.

### ரிஷபம்

(கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2-ம் பாதம்)

இந்த வாரம் பணவரத்து அதிகரிக்கும். அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். உயர்ந்த ஆடை ஆபரணங்கள் சேரும். நன்மை தீமை அறிந்து செயல்பட்டு நன்மை கிடைக்க பெறுவீர்கள். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலைச்சல் குறையும். பெண்களுக்கு எடுத்த காரியத்தை செவ்வனே செய்து முடிப்பீர்கள். கலைத்துறையினருக்கு சுபச்செலவு ஏற்படும். மாணவர்களுக்கு பாடங்கள் படிப்பது மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கும். தேர்வில் அதிக மதிப்பெண் குறிக்கோளுடன் செயல்படுவீர்கள்.

பரிகாரம்: நவகிரஹங்களை வணங்குவது மேன்மை தரும். எண்ணங்கள் யாவும் ஈடேறும்.

### விருச்சிகம்

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை):

இந்த வாரம் தெளிவான மனநிலையுடன் முன்னேற்றம் காண்பீர்கள். சுறுசுறுப்புடன் எதையும்செய்வீர்கள். எதிர்காலம்தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும். புதிய வீடு கட்டுவதற்கான வேலைகளில் ஈடுபடுவீர்கள். வாகனவசதி ஏற்படும். குடும்பத்தில் வாக்குவாதங்கள் நீங்கும். வாழ்க்கை துணையிடமும் குழந்தைகளிடமும் அனுசரித்து செல்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். பெண்களுக்கு எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்க கூடுதல் நேரம் உழைக்க வேண்டி இருக்கும். கலைத்துறையினர் சிக்கனத்தை கடைபிடிப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற நண்பர்களின் உதவி கிடைக்கும். வீண் செலவை குறைப்பது நல்லது.

பரிகாரம்: செவ்வாயை வணங்கினால் செல்வம் குவியும்.

### மிதுனம்

(மிருகசீரிஷம் 3, 4-ம் பாதங்கள் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்):

இந்த வாரம் புகழ், கௌரவம் அதிகரிக்கும். நீங்கள் சொல்லும் ஆலோசனைகள் மற்றவர்களுக்கு கை கொடுக்கும். தைரியம் அதிகரிக்கும். பணவரத்து அதிகரித்தாலும் செலவும் வந்து சேரும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினை தீரும். குடும்பத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் குறையும். பிள்ளைகளின் மீது கவனம் தேவை. வாகனங்களால் செலவு இருக்கும். குடும்ப உறுப்பினர்களின் உடல் நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தீவிரம் காட்டுவீர்கள். பெண்களுக்கு நீண்ட நாள் பிரச்சினைகள் தீரும். கலைத்துறையினருக்கு தகுவலம் லாபகரமாக நடந்து முடியும். மாணவர்களுக்கு: பாடங்களை மனநிறைவுடன் படிப்பீர்கள்.

பரிகாரம்: பெருமாளை வணங்குவது பெருமை தரும்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்):

இந்த வாரம் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த ஆடை, ஆபரணம் வாங்க நேரிடும். விருந்து நிகழ்ச்சிகளுக்கு சென்று வருவீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வாக்கு வன்மையால் நல்ல லாபம் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். நீண்ட நாட்களாக உங்களுக்கு உங்கள் மேலிடத்திற்கும் இருந்து வந்த வேற்றுமைகள் அகலும். பெண்களுக்கு புத்தி கூர்மையுடன் செயல்பட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிட்டும். மாணவர்களுக்கு பாடங்கள் படிப்பதில் ஆர்வம் உண்டாகும். ஆசிரியர்களின் ஆதரவுடன் படித்து தேர்வில் வெற்றி பெறுவீர்கள்.

பரிகாரம்: நந்தீஸ்வரரை வணங்குவது பெருமை தரும்.

### கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்)

இந்த வாரம் மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கப்பூர்வமான யோசனைகளை பயன்படுத்தி வெற்றி காண்பீர்கள். கடித போக்குவரத்து அனுகூலமான பலனைதரும். பயணம்லாபகரமாக இருக்கும். வீடு மனை சார்ந்த விஷயங்களில் தொய்வு நீங்கும். குடும்பத்தில் இருப்பவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வது அமைதி தரும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகளால் குடும்ப விஷயங்கள் சாதகமாக நடக்கும். உத்தியோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பார்கள். வேலைபற்றிய கவலை நீங்கும். நிர்வாகத்தின் ஆதரவு இருக்கும். பெண்களுக்கு நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். கலைத்துறையினருக்கு பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். மாணவர்களுக்கு மற்றவர்களை அனுசரித்து செல்வது நன்மைதரும். விளையாட்டுகளில் கவனம் செலுத்துவதுடன் கல்வியிலும் கூடுதல் கவனம் நன்மை தரும்.

பரிகாரம்: துர்க்கையை வணங்கினால் துன்பம் அகலும். இருள் விலகும். இன்பம் பொங்கும்.

### மகரம்

(உத்திராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்):

இந்த வாரம் எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். செயல்திறன் மேலோங்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் கூடுதல் வருமானம் கிடைக்கும். முக்கிய நபர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான நிலை காணப்படும். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும். .பெண்களுக்கு மற்றவர்கள் உதவியுடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். கலைத்துறையினர் வீண் அலைச்சலை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் பழகும்போது கவனம் தேவை. கூடுதல் நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது நல்லது.

பரிகாரம்: வாராகி வணக்கம் வரம் தரும்.

### சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்)

இந்த வாரம் கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். பங்குச்சந்தை மூலமாக லாபம் ஏற்படும். குடும்பத்தில் இருந்த மனஸ்தாபம் நீங்கும். உறவினர்கள், நண்பர்கள் உதவ முன்வருவார்கள். தொழில் முன்னேற்றம் காணப்படும். கடித போக்குவரத்து மூலம் தொழில் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். சாமர்த்தியமாக வாடிக்கையாளர்களுடன் பேசி அவர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள் உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். எதிலும் திட்டமிட்டு செயலாற்றுவதால் மேல் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். பெண்களுக்கு மனத்துணிவு அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு திட்டமிட்டு செயல்படுவது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். மாணவர்களுக்கு எதிர்காலம் பற்றிய திட்டங்கள் மனதில் தோன்றும்.

பரிகாரம்: நரசிம்மரை வணங்கினால் நலம் கொழிக்கும்.

### கும்பம்

(அவிட்டம் 3, 4-ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்கள்):

இந்த வாரம் புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். பயணங்களின்போது உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற்கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழி செய்யும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும். பெண்களுக்கு மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவு உண்டாகும். கலைத்துறையினருக்கு பணவரத்து திருப்தி தரும். மாணவர்களுக்கு எதையும் அவசரமாக செய்யாமல் யோசித்து செயல்படுவது நல்லது. கல்வியை பற்றிய கவலை குறையும்.

பரிகாரம்: பைரவரை வணங்கினால் அல்லல் அகலும்.

### கன்னி

(உத்திரம் 2, 3, 4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதம்)

இந்த வாரம் மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மன தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தன்னம்பிக்கை அதிகரிக்கும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கைத்துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார். அனுபவப்பூர்வமான அறிவுத் திறனை உபயோகித்து எதிலும் வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகள் சொல்லியபடி நடப்பது நன்மை தரும். பெண்களுக்கு மனதில் மகிழ்ச்சி உண்டாகும்படியான சூழ்நிலை உண்டாகும். கலைத்துறையினருக்கு செலவு அதிகரிக்கும். மாணவர்களுக்கு பெற்றோர், ஆசிரியர் கூறியபடி செயல்படுவது கல்வியில் வெற்றி பெற உதவும்.

பரிகாரம்: சிவனை வணங்குவது சிறப்பு தரும்.

### மீனம்

(பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி):

இந்த வாரம் சுணங்கிக் கிடக்கும் காரியங்கள் வேகம் எடுக்கும். எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். குடும்பத்தில் ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்படும். கணவன், மனைவி அனுசரித்து செல்வது நல்லது. நண்பர்கள் உறவினர்களுடன் மனஸ்தாபம் உண்டாகலாம். தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம். பெண்களுக்கு எந்த ஒரு செயலை செய்யும் முன்பும் யோசித்து ஈடுபடுவது நல்லது. கலைத்துறையினருக்கு தேவையான உதவிகள் கிடைப்பது தாமதப்படும். மாணவர்களுக்கு கவன தடுமாற்றம் இல்லாமல் பாடங்களை படிப்பது நன்மை தரும். சக மாணவர்களிடம் எச்சரிக்கையாக பழகுவது நல்லது.

பரிகாரம்: தக்ஷிணாமூர்த்தி வணக்கம் விவேகம் தரும்.



சிவகங்கை காசி விஸ்வநாதர் கோவிலில் பங்குனி உத்திர தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம்செய்து தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

## நீட் தேர்வு அச்சத்தால் உயிரிழந்த 22 மாணவர்களுக்கு ஏப்.19-ல் கண்ணீர் அஞ்சலி!

### எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு!!

சென்னை, ஏப்.11

கடந்த 4 ஆண்டுகால திமுக ஆட்சியில் நீட் தேர்வு அச்சத்தால் தங்கள் இன்னுயிரை மாய்த்துக்கொண்ட 22 மாணவ, மாணவிகளுக்கு அதிமுக மாணவர் அணி சார்பில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் வரும் 19ம் தேதி மாலை மெழுகுவத்தி ஏந்தி கண்ணீர் அஞ்சலி செலுத்தப்படும் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: 'திமுக ஆட்சிக்கு வந்ததும் முதல் கையெழுத்து நீட் தேர்வு ரத்து. அதை ரத்து செய்வதற்கான ரகசியம் எங்களுக்கு தெரியும்' என்று மேடை தோறும் பொய் வாக்குறுதி அளித்து மாணவர்கள், பெற்றோரின் வாக்குகளை பெற்று வெற்றி பெற்றனர்.

நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்க நடத்தப்பட்ட நாடகத்தின் முதல்கட்டமாக தமிழக சட்டப்பேரவையில் 2 முறை தீர்மானங்கள் நிறைவேற்றி குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தனர். 2ம் கட்டமாக திமுக மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் உள்ளிட்ட சுமார் 1 கோடி பேரிடம் தமிழகத்துக்கு நீட் வேண்டாம் என கையெழுத்து பெற்று குடியரசுத் தலைவருக்கு அனுப்புவோம் என்று வெற்று விளம்பரம் செய்து, சுமார் 50 லட்சம் பேரிடம் கையெழுத்து பெற்றதாகக்கூறி, அவற்றை சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடந்த திமுக இளைஞர் அணி மாநாட்டில் காட்சிக்கு வைத்தனர். 3ம் கட்டமாக தற்போது சட்டப்பேரவை கட்சி தலைவர்கள் கூட்டத்தை நடத்தியுள்ளனர். இவர்களால் நீட் தேர்வை ஒழிக்க முடியாது என்பதை பல காரணிகளுடன் தெரிவித்து, இந்த கூட்டத்தை புறக்கணித்தோம். உச்ச நீதிமன்றத்தில் நீட் தேர்வு விலக்கு கோரி ஏற்கெனவே ஜெயலலிதா அரசு தொடர்ந்த வழக்கை திமுக அரசு வாபஸ் பெற்றது. அதன்பின்னர் புதிய வழக்கை தாக்கல் செய்தனர்.

இன்றுவரை அந்த வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், மீண்டும் புதிய வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாக அனைத்து கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது வேடிக்கை. நீட் விஷயத்தில் மாணவர்கள், பெற்றோரை ஏமாற்ற இன்னும் எத்தனை நாடகங்களை அரங்கேற்றப் போகிறார்களோ தெரியவில்லை. கடந்த 2021ல் திமுக ஆட்சிக்கு வந்தது முதல் இதுவரை நீட் தேர்வு அச்சத்தால் தமிழகத்தில் 22 மாணவ, மாணவிகள் தங்கள் இன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தும் வகையில் அதிமுக மாணவர் அணி சார்பில் அனைத்து வருவாய் மாவட்ட தலைநகரங்களிலும் வரும் 19ம் தேதி மாலை 6 மணி அளவில் மெழுகுவத்தி ஏந்தி அஞ்சலி செலுத்தப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## போக்சோ வழக்கில் தலைமறைவாக உள்ள மதபோதகர் முன்ஜாமின் கோரி மனு தாக்கல்!

சென்னை, ஏப்.11–

போக்சோ வழக்கில் தலைமறைவாக உள்ள கோவை கிறிஸ்தவ மத போதகர் ஜான் ஜெபராஜ் முன் ஜாமின் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

கிறிஸ்தவ மத பாடல்கள் மூலமாக சமூக வலைதளத்தில் மிகவும் பிரபலமாக இருப்பவர் கோவையைச் சேர்ந்த கிங் ஜெனரேஷன் கிறிஸ்துவ பிரார்த்தனைக் கூடத்தின் மதபோதகர் ஜான் ஜெபராஜ். கடந்த 2024ம் ஆண்டு மே 21ம் தேதி அன்று ஜான் ஜெபராஜ் கோவை ஜி.என்.மில்ஸ் பகுதியில் உள்ள தனது வீட்டில் விருந்து நிகழ்ச்சி ஒன்றை நடத்தியுள்ளார்.

அப்போது அந்த நிகழ்வில் பங்கேற்ற 2 சிறுமிகளுக்கு அவர் பாலியல் துன்புறுத்தல் அளித்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமிகள் அளித்த புகாரின்பேரில் மதபோதகர் ஜான் ஜெபராஜ் மீது கோவை காந்திபுரம் அனைத்து மகளிர் போலீஸார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கில் தலைமறைவாக உள்ள ஜான் ஜெபராஜை போலீஸார் தேடி வருகின்றனர். அவர் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லாமல் இருக்க விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களுக்கு லுக்அவுட் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜான் ஜெபராஜ் தனக்கு முன்ஜாமின் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அதில், "நானும் எனது மனைவியும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம்.

எனது மனைவி மற்றும் அவரது குடும்பத்தினரின் தூண்டுதலின்பேரில் சிறுமிகளை வைத்து எனக்கு எதிராக போலீஸில் பாலியல் புகார் அளிக்கப்பட்டுள்ளது. போலீஸாரும் முறையாக விசாரிக்காமல் என் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

காவல் துறையின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க தயாராக இருக்கிறேன். எனவே எனக்கு முன்ஜாமின் வழங்க வேண்டும்," என மனுவில் கோரியுள்ளார்.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.



பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில் விற்பனைக்காக வந்துள்ள பலா பழங்களை படத்தில் காணலாம்.

## பெண் தொழிலதிபர் வீட்டில் தங்க, வைர நகைகள் திருட்டு!

### பணிப்பெண் கைது!!

சென்னை,ஏப்.11–

பெண் தொழிலதிபர் வீட்டில் தங்க, வைர நகை திருடிய வழக்கில் பணிப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார். சென்னை போயஸ் கார்டன், கஸ்தூரி எஸ்டேட் 2–வது தெருவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருபவர் தொழிலதிபர் வனிதா சித்தார்த் (38). இவர் கணவருடன் சேர்ந்து டிஜிட்டல் பயிற்சி அகாடமி நடத்தி வருகிறார்.

இந்நிலையில் இவர் கடந்த 7–ம் தேதி வீட்டிலுள்ள லாக்கரை திறந்து நகைகளை சரிபார்த்த போது சுமார் 24 பவுன் நகைகள், வெள்ளிப் பொருள் மற்றும் வைர நகைகள், வெள்ளிப்பொருள் மற்றும் ரொக்கம் ரூ.23,500 காணாமல் போனது தெரிய வந்தது.

அதிர்ச்சி அடைந்த அவர் இது தொடர்பாக தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். அதன்படி போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை மேற்கொண்டனர். முதல் கட்ட விசாரணையில் வெளிநபர்கள் யாரும் வீட்டுக்குள் வந்த திருடவில்லை என்பது தெரியவந்தது.

இதையடுத்து வீட்டில் வேலை செய்து வந்த திருவல்லிக்கேணியை சேர்ந்த சங்கீதா (25) என்பவரை பிடித்து விசாரித்தனர்.

முதலில் நான் திருடவில்லை என தெரிவித்த அவர் பின் போலீசாரின் தொடர் விசாரணையில் வனிதா வீட்டில் சிறுக சிறுக நகைகள் மற்றும் பணத்தை திருடியதை ஒப்புக் கொண்டார். அவரிடமிருந்து 24 பவுன் தங்க நகைகள் மீட்கப்பட்டன. மீதமுள்ள நகைகளை மீட்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. கைது செய்யப்பட்ட சங்கீதா விசாரணைக்கு பின்னர் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

## கூட்டுறவு மேலாண்மை பயிற்சிக்கு ஏப்.16 முதல் விண்ணப்பம்!

### ஆட்சியர் தகவல்!!

சென்னை,ஏப்.11–

சென்னை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் அஞ்சல் வழி கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சி மே 9–ம் தேதி தொடங்கப்பட உள்ளது. 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்களின் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

தகுதியுள்ள நபர்கள் www.tncu.gov.tn.in என்ற இணையதளத்தில் ஏப்.16 முதல் மே 6–ம் தேதி வரை விண்ணப்பிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஆன்லைன் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன், உரிய சான்றிதழ்கள் , புகைப்படத்தை இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பயிற்சி கட்டணம் ரூ.20,750 விண்ணப்ப கட்டணம் ரூ.100என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஓராண்டு பயிற்சி ஆகும். புதிய பாடத்திட்டத்தின் படி தமிழில் வகுப்புகள் நடைபெறும். தேர்வுகளும் தமிழில் நடத்தப்படும். கூடுதல் விவரம் அறிய 9444470013, 044–25360041 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம் என்று சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.



கோவை மதுக்கரை ஒன்றியம் மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு மின்சாரத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி பூமிபூஜை செய்து தொடங்கி வைத்தார். அருகில் கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி சங்கேத் பல்வந்த் வாகே , பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வர சாமி,மாவட்ட செயலாளர் தளபதி முருகேஷ், ஒன்றிய செயலாளர் விஜய் சேகரன், முன்னாள் மதுக்கரை ஒன்றிய துணை பெருந்தலைவர் எம்ஆர்ஆர் பிரகாஷ், அரிசி பாளையம் தண்டபாணி, பாலத்துறை நந்தகோபால் உட்பட பலர் உள்ளனர்.

### ஓசூர் மாநகராட்சிப் பகுதிகளில்

# அடிப்படை வசதிகளை நிறைவேற்றக்கோரி 15-ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம்!

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு!!

சென்னை, ஏப். 11

ஓசூர் மாநகராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்றத் தவறியதிமுக–வின்ஸ்டாலின் மாடல் அரசு மற்றும் மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்தும், மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் அதி.மு.க. சார்பில் 15–ஆம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனி சாமி கூறியுள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதா வது:–

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர் மாநகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் அத்தியாவசியத் தேவைகள் நிறைவேற்றப்படாத காரணத்தால், அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருவதாக, தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

கழக ஆட்சியின்போது, ஓசூர் மாநகராட்சிவாழ் மக்களுக்கு தங்குதடையின்றி சீரான குடிநீர் வழங்கும்பொருட்டு 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு நவீன முறையில் குழாய்களைப் பதித்து, சீரான குடிநீர் வழங்கப்பட்டது. ஆனால், தற்போதைய திமுக ஆட்சியில் முறையாக பராமரிக்காத காரணத்தால் சரிவர குடிநீர் வழங்கப்படுவதில்லை.

மக்களின் பொழுதுபோக்கிற்காக அமைக்கப்பட்டுள்ள பசுமைப் பூங்காக்கள் சரிவர பராமரிக்கப்படுவதில்லை.

சொத்து வரி இரண்டு மடங்காக உயர்த்தப்பட்ட நிலையிலும், மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை.மாநகராட்சியில் நடைபெற்று வரும் அனைத்துப் பணிகளும், தனி நபர்கள் பொதுமக்களின் பொழுதுபோக்கிற்காக ராமநாயகன் ஏரி, கர்னூர் ஏரி ஆகிய இடங்கள் சுமார் 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அழகுபடுத்தப்பட்டுள்ள நிலையில், இன்னும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவராமல் காலம் தாழ்த்தப்பட்டு வருகின்றது. இதுபோன்று, மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறை வேற்றுவதில் சிறிதும் அக்கறை இல்லாமல் இருந்து வரும், விடியா திமுகவின் ஸ்டாலின் மாடல் அரசுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில், ஓசூர் மாநகராட்சியில் நிலவி வரும் பல்வேறு நிர்வாக சீர்கேடுகளுக்குக் காரணமானதிமுகவின்ஸ்டாலின் மாடல் அரசு மற்றும் மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்தும்; மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தின் சார்பில் 15–ஆம் தேதி (செவ்வாய்க் கிழமை) காலை 10 மணியளவில், ஓசூர், ராயக்கோட்டை ரோடு, மின்சார அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக மகளிர் அணிச் செயலாளரும், கழக செய்தித் தொடர்பாளரும், முன்னாள் அமைச்சருமான பா. வளர்மதி அவர்கள் தலைமையிலும்; கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. பாலகிருஷ்ணா ரெட்டி முன்னிலையிலும் நடைபெறும்.

இவ்வாறு கூறியுள்ளார்.

### மேட்டூர் அணையில் இருந்து

# ஜீன் 12-ம் தேதி தண்ணீர் திறக்க வாய்ப்பு!

## நீர்வளத்துறை செயலர் தகவல்!!

மேட்டூர், ஏப்.11–

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் தமிழக நீர்வளத் துறையின் கூடுதல் தலைமை செயலாளர் மங்கத் ராம் சர்மா ஆய்வு மேற்கொண்டார். அணையின் வலது கரை, இடது கரை, 16 கண் மதகு, சுரங்கம் உள்ளிட்ட பகுதிகளையும், அணையில் நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகளையும் பார்வையிட்டார். மேல்மட்ட மதகு, கீழ்மட்ட மதகு ஆய்வு சுரங்கம் மற்றும் அணை மின் நிலையத்தையும் ஆய்வு மேற்கொண்டார்.

அணைக்கு வரும் நீரின் அளவு, நீர் வெளியேற்றம் குறித்து கேட்டறிந்தார். பின்னர், நீர்வளத்துறை திருச்சி மண்டல தலைமை பொறியாளர் தயாளகுமார் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர், அவர் நிருபர்களிடம் கூறியதாவது: வழக்கமான ஆய்வு பணிக்காக வந்துள்ளேன். மேட்டூர் அணை பராமரிப்பு பணி சிறப்பாக நடந்து வருகிறது. மேட்டூர் அணை நல்ல நிலையில் உள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும் முன்பாக நேரடியாக பார்வையிட்டு அணையின் நிலவரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜூன் 12–ம் தேதி, தமிழ்நாடு முதல்வர் நேரில் வந்து மேட்டூர் அணை தண்ணீரை திறப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் முன்கூட்டியே பராமரிப்பு பணிகளை முடிக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையில் கூடுதல் பணிகள் கேட்டுள்ள நிலையில், அந்தப் பணிகள் வழங்கப்படும். தற்போது, ரூ 20 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது. 6 மாதங்கள் மட்டுமே பணிகள் செய்ய முடியும். தற்போது, 2 மாதங்களுக்கு முன்பாக மேட்டூர் அணை பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணை திறப்பிற்கு முன்பாக இந்தப் பணிகளை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேட்டூர் அணை திறக்கப்பட்ட பிறகு பணிகள் நிறுத்தப்படும். பாசனகாலம் முடித்த பிறகு பணிகள் மீண்டும் தொடங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**விற்பனைக்கு**

3820 சதுர அடி அளவுள்ள கோவை காந்திபுரம் 100 அடி ரோடு அருகே ஆம்னி பஸ்டாண்டு எதிரில் சத்தி சாலையில் கதவு எண்.974 TO 980 & 980 ABC (டவுன் சர்வே நிர். 11/1180) கொண்ட கட்டிடம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புக்கு:
9443223376, 9789710396

**32-ம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 17.07.1965

மறைவு 11.4.1993

**கீர்த்தி சக்ரா திரு. நாயக் கண்ணாளன் கென்னடி**

ஆண்டுகள் முப்பத்தி இரண்டு
மிரட்டும் தீவிரவாதம் அதை விரட்டும் இராணுவ கூட்டம்
எங்களுக்குள் கலந்து எங்களோடு வாழும் அன்பு கென்னடியே!!!
நீ வாழ பிறந்தவன் ஆம்!
நீ நாடு வாழ பிறந்தவன் திருட்டு தீவிரவாதத்தை தீர்த்து கட்டத்தான்
இங்கு பிறந்து வந்தாய்!
நீ நேரில் கண்டவன் தீவிரம் கொண்டவன் அதனால் அவன் உன்னால்
தீர்க்கப்பட்டான் அவர்களை தீர்க்கதான் உன்னையும் நீ
மாய்த்துக் கொண்டாய்
உன் உயிர் சாய்ந்தபோது சாதனை படைத்தாய்!
அன்று நாங்கள் உன்னை இழந்தோம் அந்த நேரத்தில் அங்கே
மாய்க்கப்பட்ட உன் உயிர் தீவிரவாதத்திற்கு எதிரான கடைசி உயிராய்
இருக்க வேண்டும் என்று நாங்கள் ஆசைப்பட்டோம் ஆனால் அந்தோ
பரிதாபம் இன்றும் தொடர்கிறது
உன் இராணுவ இளவல்களின் உயிரிழப்பு!!!

கென்னடி குடும்பத்தினர்...

★ வாழ்க நம் மக்கள் ★ வளர்க நம் நாடு

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்
நாயக்கன்பாளையம் கோவை-641020

கென்னடி கேஸ் ஏஜென்ஸி அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்
K.வடமதுரை கோவை-641 017

## இன்றைய நிலவரம்

| | | | |
|---|---|---|---|
| தங்கம் | 22 CT | 1 கிராம்<br>8 கிராம் | ரூ.8,745<br>ரூ. 69,960 |
| | 24 CT | 1 கிராம் | ரூ. 9,540 |
| வெள்ளி | | 1 கிராம் | ரூ. 108.00 |

# சமூகத்தின் பெரிய சிக்கலை பேச வரும், ‘பேரன்பும் பெருங்கோபமும்’!




‘ஈ5என்டர்டெயின்மென்ட்’ காமாட்சி ஜெயகிருஷ்ணன் தயாரிப்பில், இளையராஜாவின் இசையில் உருவாகியுள்ள புதிய படம் ‘பேரன்பும் பெருங்கோபமும்’. பாலுமகேந்திராவின் பட்டறையில் தயாராகி இயக்குநர் கரு.பழனியப்பனிடம் உதவியாளராக பணியாற்றிய சிவப்பிரகாஷ் இப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகம் ஆகிறார்.

இயக்குநர் தங்கர்பச்சானின் மகன் விஜித் பச்சான் இந்த படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார். கதாநாயகியாக ஷாலி நடித்துள்ளார். முக்கிய வேடங்களில் மைம் கோபி, அருள்தாஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்தின் இசை மற்றும் டிரைலர் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. இந்நிகழ்வில்கலந்து கொண்ட இயக்குனர், நடிகர் தங்கர்பச்சான் பேசும்போது,இப்படம் நான் முதற்கொண்டு நிறைய பேர் பேசத் தவறியதை பேசி இருக்கிறது. இது 40 ஆண்டுகளில் என் படங்கள், என் சிறுகதைகள், நாவல்கள் கூட செய்ய தவறியதை இந்த படம் செய்து இருக்கிறது. இன்றைக்கு சமூகத்தில் இருக்கும் ஒரு பெரிய சிக்கலை இந்த படம் பேசுகிறது. ஒரு படம் என்பது சிரிக்க வைப்பது மட்டும் இல்லாமல் மற்றவர்கள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டி அவர்களை அடைய வேண்டும். பல அரசியல் இயக்கங்கள் செய்யத் தவறியதை இந்த படம் சாதித்திருக்கிறது. இப்படம் இயல்பாக இருந்தாலும் வசனங்கள் மனோகரா, பராசக்தி படங்களில் வருவது போன்று தான் இந்த படத்தில் உரையாடல்கள் இருக்கிறது. அந்த அளவுக்கு முருகேஷ் பாபு வசனத்தை அவ்வளவு அழகாக எழுதியிருக்கிறார்.

படத்தின் கதாபாத்திரங்களான சாராவும் ஜீவாவும் உங்களை தூங்கவே விட மாட்டார்கள். இந்தியாவிலேயே தமிழில் தான் மிகச்சிறந்த நடிகர்கள் இருக்கிறார்கள். இந்த படத்தின் மூச்சு இசைஞானி தான். நாங்கள் இருவரும் பேசிக் கொள்ளாமல் இருந்தாலும் நான் அவருடன் தான் இருக்கிறேன். இந்த படத்தை முழுமையாக புரிந்து வைத்து எப்படி மக்களிடம் கொண்டு போக வேண்டும் என அழகாக செய்து இருக்கிறார். ஒவ்வொரு காட்சியையும் தனது இசையால் செதுக்கி உள்ளார். இந்த படத்தின் வெற்றியில் இளையராஜாவுக்கு தான் பெரும் பங்கு இருக்கிறது. என்னுடைய மகனுக்கு இரண்டாவது படத்திலேயே இந்த கொடுப்பினை கிடைத்துள்ளது என்று கூறினார்.

# தனுஷின் 56-வது படத்தை இயக்கும் மாரி செல்வராஜ்!



மாரி செல்வராஜ் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்ற கர்ணன் படத்தின் 4 ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்ட நிலையில், நடிகர் தனுஷின் 56-வது படத்தை மாரி செல்வராஜ் இயக்குவதாகவும், ஐசரி கணேஷின் வேல்ஸ் பிலிம் இண்டெர்நேஷனல் நிறுவனம் தயாரிக்கவுள்ளதாகவும் அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது குறித்து இயக்குனர் மாரி செல்வராஜே தனது எக்ஸ் தள பதிவில், ’’கர்ணனின் வாளால் உருவாக்கப்பட்ட பயணத்தின் 4-வது ஆண்டைக் கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.இத்தனை ஆண்டுகளாக கர்ணன் திரைப்படத்தை ஆதரித்த, கொண்டாடிய அனைவருக்கும் நன்றி.மேலும், என்னுடைய அடுத்த திரைப்படமும் அன்புக்குரிய தனுஷ் சார் உடன்தான் என்பதை அறிவிப்பதில் உற்சாகமடைகிறேன். இது நீண்டநாட்களாக என் மனதில் ஊறிக்கொண்டிருந்த ஒரு விஷயம், மீண்டும் அவருடன் கைகோர்ப்பதில் மிகவும் சந்தோஷம்.இதுதான் நான் ஐசரி கணேஷ் சாருடன் இணையும் முதல் திரைப்படம், என்னால் இதைவிட மகிழ்ச்சியாக இருக்க முடியாது. இது மிகவும் சிலிர்ப்பூட்டும் அனுபவமாக இருக்கப்போகிறது. இதோ, வேர்கள் ஒரு பெரும் போரைத் தொடங்குகின்றன’’ எனக் கூறியுள்ளார்.இப்பட போஸ்டரில் மண்டை ஓடு மற்றும் போர் வாள் இருப்பதால் ரசிகர்கள் இந்த படம் கட்டாயம், கர்ணன் படத்தை போலவே இதுவும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் போராட்ட களத்தை சித்தரிக்கும் வகையில் இப்படத்தின் திரைக்கதையும் அமைந்திருக்கலாம் என்றும் நெட்டிசன்கள் பதிவிட்டு வருகின்றனர்.

# ‘வெலிங்டன்’ தீவில் பிருத்விராஜின் ‘நோபடி’ படப்பிடிப்பு!



நடிகர் பிருத்விராஜ் சுகுமாரன், பார்வதி திருவோத்து மற்றும் ஹக்கிம் ஷாஜஹான் ஆகியோர் நடிப்பில், பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ’நோபடி’ திரைப்படம், எர்ணாகுளத்தில் உள்ள அழகிய வெலிங்டன் தீவில் பூஜையுடன் தொடங்கியுள்ளது. இப்படத்தில் அசோகன்,மதுபால்,ஹக்கிம் ஷாஜஹான், லுக்மான்அவரன்,கணபதி,வினய் உள்பட பலர் நடித்து வருகின்றனர். ஃபோர்ட் பிரம்மாண்டமாக உருவாகும் இப்படத்தினை சமீர் அப்துல் எழுதியுள்ளார். பிரபல இயக்குனர் நிசாம் பஷீர் இயக்குகிறார். உணர்வுப்பூர்வமான கதைக்களத்தில், அற்புதமான நடிகர்களின் நடிப்பில், அழகான திரை அனுபவமாக உருவாகிறது. இப்படத்தை பிருத்விராஜ் புரொடக்சன்ஸ் மற்றும் ஈ 4 எக்ஸ்பிரிமென்ட்ஸ் ஆகிய நிறுவனங்களின் சார்பில், சுப்ரியா மேனன், முகேஷ் மேத்தா மற்றும் சி.வி. சாரதி ஆகியோர் இணைந்து தயாரிக்கின்றனர்.அனிமல் படத்தின் இசையமைப்பாளர் ஹர்ஷவர்தன் ராமேஷ்வர் இப்படத்திற்கு இசையமைக்கிறார். முன்னணி தொழில்நுட்ப கலைஞர்களின் கைவண்ணத்தில் இப்படம் ஒரு தனித்துவமான மற்றும் மறக்க முடியாத சினிமா அனுபவமாக உருவாகிறது. படத்தின் மற்ற விவரங்கள் விரைவில் அதிகாரப்பூர்வமாக வெளியாகும் என்கிறது இப்படக்குழு.

# ‘வேம்பு’: ஒரு யதார்த்தவாதியின் வாழ்வியல் கதை!



